بسم الله الرحمن الرحيم

## இறைநம்பிக்கையாளரின் நிலை

இறைநம்பிக்கையாளரின் செயல்பாடுகள் அனைத்தும் வியப்பானதாகும். அவரது நடவடிக்கைகள் அனைத்தும் நன்மையாகவே முடிகின்றன. இறைநம்பிக்கையாளரைத் தவிர மற்ற எவருக்கும் இந்நற்பாக்கியம் கிடைப்பதில்லை. நல்ல வசதி, வாய்ப்புகளும் மகிழ்ச்சியும் அவரை வந்தடையும் போது, அதற்காக நன்றி செலுத்துகிறார். அது அவருக்கு நற்செயலாக ஆகிவிடுகிறது. ஏதேனு மொரு துன்பமோ, நெருக்கடியான நிலையோ வந்துவிட்டால் அவர் அதற்காக பொறுமை மேற்கொள் கிறார். அதுவும் அவருக்கு நற்செயலாக, நன்மையானதாக அமைந்துவிடுகிறது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

இந்த நபிமொழி, நபித் தோழர் ஸுஹைப் (ரழி) அவர்கள் மூலமாக அறிவிக்கப்பட்ட நபிமொழியாகும்.

முஸ்னது அஹ்மது எனும் நூலில் இந்த நபிமொழியில் சற்றே கூடுதலான வாசகங்களுடன் எழுதப்பட்டுள்ளது. அதன் ஆரம்பத்தில் ஓரிறைவனை நம்பி ஏற்றுக் கொண்ட மனிதன் எவ்வளவு நற்பாக்கியமானவன் என்று வருகிறது. பிறகு, அல்லாஹ் அவனுக்கு ஏதேனுமொரு மகிழ்வை, வசதி வாய்ப்பை, நல்லதை, வழங்கிவிட்டால் அவன் அதற்காக நன்றி பாராட்டுகிறான். இது அவனுக்கு மேற்கொண்டு நன்மை கிடைக்க காரணமாகிவிடுகிறது. அவனுக்கு ஏதேனுமொரு துன்பமோ, சிரமமோ வந்துவிட்டால், அவன் அதில் பொறுமையைக்

கடைப்பிடிக்கிறான். இதுவும் அவனுக்கு நன்மையான தாக, நற்செயலாக அமைந்துவிடுகிறது என நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த நபிமொழியில் அல்லாஹ்வை நெருங்குவதற் குரிய அடிப்படையான விசயங்களில் சில பகுதி கூறப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போதித்து வழிகாட்டியபடி அந்த நபிமொழியை விளங்கி, அதை நம் வாழ்வில் கடைப் பிடிக்க அனைவரும் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

அடியார்கள் அல்லாஹ்வுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் முதன்மையானது, அவனோடு எப்பொரு ளையும் கூட்டாக்கிவிடாமல் அவனுக்கே முற்றிலும் அடிமையாகிவிடுவதுதான். அல்லாஹ்வுக்கு அடிமை யாகி விடுவது என்றால் என்ன பொருள்? உலகில் முழு சுதந்திரத்திற்கும், முழு அதிகாரத்திற்கும் சொந்தக்காரன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே! என்று உறுதியாக மனதில் நம்பவேண்டும். எதுவெல்லாம் மனிதனுக்கு கிடைக் குமோ, அல்லது கிடைக்காமல் போகுமோ அவை அனைத்தும் அல்லாஹ்வின் முடிவின்படியே, அவனது நாட்டத்தின்படியே நடக்கிறது. அவனது வாழ்வில் நடக்கும் நல்லதும் கெட்டதும் அல்லாஹ்வின் விருப்பப் படியே நடக்கிறது, அவனது உத்தரவின்படியே நடக் கிறது என்று மனப்பூர்வமாக நம்பவேண்டும்.

இதைப் பற்றிய நபிமொழிகள் அதிகம் அறிவுறுத்து கின்றன. எதைக் கேட்டாலும் அல்லாஹ்விடமே கேளுங்கள். எதை யாசித்தாலும் அல்லாஹ்விடமே யாசியுங்கள். உதவி கோரினால் அவனிடமே உதவி



கோருங்கள். தமக்குத் தேவையானதை அவனிடமே வேண்டிக்கொள்ளுங்கள். ஏனெனில் படைப்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து உங்களுக்கு ஏதேனும் நன்மை செய்துவிடலாம் என்று நாடினாலும் அல்லாஹ் எழுதிவிட்டதைத் தவிர கூடுதலாக எந்தவொரு நன்மையும் செய்திடமுடியாது. அவ்வாறே படைப்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து உங்களுக்கு ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்திவிடலாம் என்று நினைத்தாலும் அவன் எழுதி விட்டதைத் தவிர வேறெதையும் செய்திட முடியாது. (முடிவுகள்) எழுதிய பேனாவும் (கீழே) வைக்கப் பட்டுவிட்டது. எழுதப்பட்ட ஏடுகளும் காய்ந்து போய்விட்டது. இந்த நபிமொழியில் அல்லாஹ்வின் விருப்பம், அவனுடைய நாட்டம், அவனது உத்தரவுதான் எல்லாவற்றையும் வென்று நிற்கும் அதை மிஞ்சிவிடும் ஆற்றல் எவருக்கும் எப்பொருளுக்கும் இல்லை என்பது உணர்த்திக் காட்டப்படுகின்றது.

இன்னொரு நபிமொழியையும் நீங்கள் அறிந்து வைத்திருப்பீர்கள். உயர்வும் மேன்மையும் பொருந்திய அல்லாஹ் கூறுவதாக அண்ணல் நபிகளார் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்: நீங்கள் அனைவரும் பசி, பட்டினியோடு இருந்தீர்கள். நான்தான் உங்களுக்கு உண்ண உணவுகளைக் கொடுத் தேன். நீங்கள் தாகமுடையவர்களாக இருந்தீர்கள். நான்தான் உங்களுக்கு பருக தண்ணீர் கொடுத்தேன். நீங்கள் ஆடையற்றவர்களாக இருந்தீர்கள். நான் உங்களுக்கு அணிய ஆடைகளைக் கொடுத்தேன். நீங்கள் அனைவரும் பாவம் செய்து கொண்டு இருக்கிறீர்கள்.

நான் உங்களை மன்னித்துக் கொண்டே இருக்கிறேன். எனவே உங்களுக்குத் தேவையான உணவுகளை என்னிடமே கேளுங்கள். பருக தண்ணீரையும் என்னிடமே கேளுங்கள். ஆடைகளையும் என்னிடமே கோருங்கள். பாவங்கள் புரிந்துவிட்டால் உடனடியாக என்னிடம் பாவமன்னிப்பை வேண்டுங்கள்.

படைக்கப்பட்ட படைப்பினங்களெல்லாம் ஒன்று சேர்ந்து, அவர்களால் எவ்வளவு கேட்க முடியுமோ அவை அனைத்தையும் என்னிடம் கேட்டாலும் நான் கொடுத்துவிடுவேன். அப்போதும் என்னிடமுள்ள பொக்கிஷத்திலோ ஆட்சியதிகாரத்திலோ எதுவும் குறைந்துவிடப் போவதில்லை. ஒரு மகா சமுத்திரத்தில் கொசு தனது ஓர் இறகை அல்லது ஒருவர் தனது ஊசியை முக்கி எடுத்தால் எவ்வளவு தண்ணீர் குறையுமோ அந்தளவு கூட என் கருவூலத்தில் குறைந்துவிடாது. நான் ஒன்றை உருவாக்க நாடினால் ஆகுக என்று சொல்வது தான் எனது வேலை. அது உடனே உண்டாகிவிடும். எனக்கு எவ்வித மூலப் பொருட்களோ, சாதனங்களோ தேவைப்படுவதில்லை.

## அல்லாஹ்வின் தொடர்பு

இந்த நம்பிக்கை மனதில் ஆழமாக வேரூன்றிய பின், எல்லாவற்றையும் விட அல்லாஹ்வின் மீதுதான் அதிகமாக பிரியம் வைக்கவேண்டும். அவனுக்கே கட்டுப்பட்டு முழுமையாக வழிபடவேண்டும் என்றும் இஸ்லாம் போதிக்கின்றது. அல்லாஹ்வுடனான இந்தத் தொடர்பு வலுவடைவதற்கு இரண்டு அம்சங்கள்



முக்கியமானவை. முதன்மையானவை. அவைதாம் நன்றியும் பொறுமையுமாகும்.

திறந்த மனதுடன் பரந்த சிந்தனையுடன் இவ்வுலகின் நிலைமைகளைச் சிந்தித்து, நம் கண் முன்னே கொண்டுவந்து நிறுத்திப் பார்த்தால், மொத்தம் இரண்டு நிலைமைகள் மட்டுமே இருக்கும். மூன்றாவது ஒரு நிலைமை இருக்காது. அந்த இரு நிலைமைகளை வெளிப்படுத்தும் நிகழ்வுகள்தாம் நம் வாழ்வில் நிகழ்ந்து கொண்டே இருக்கும். அவற்றில் ஒன்று, நம் அனைவராலும் எதிர்ப்பார்க்கப்படக்கூடியது. அனைவரும் விரும்பக்கூடியது. அதாவது, சந்தோஷம், மகிழ்ச்சியை உண்டாக்கக்கூடிய செல்வ, செழிப்புடன் அமைந்த நல்ல ஆரோக்கியமான நிலைமை. வசதியான நிலைமை. கவலைகளற்ற நிலைமை. மற்றொன்று, நமக்கு பிடித்தமில்லாத வெறுப்பை உண்டாக்கக்கூடிய நெருக்கடியான நிலைமை. கவலைகள் நிரம்பிய ஆரோக்கியமற்ற நிலைமை. உலகில் வாழ்பவர் யாராக இருந்தாலும், அவரது நிலைமை இந்த இரண்டில் ஒன்றாகத்தான் இருக்கும்.

எனவேதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைநம்பிக்கையாளனின் செயல்பாடுகள் அனைத்தும் நன்மையாகவே அமைந்துவிடுகின்றன என்று கூறியுள்ளார்கள். அவனுக்கு விருப்பமான, பிடித்தமான ஒரு காரியம் நடந்துவிட்டால், அவனுக்கு கிடைக்க வேண்டிய பணம், செல்வம் கிடைத்துவிட்டால் அதிலும் அவனுக்கு நன்மை கிடைக்கக்கூடிய ஒரு வழியை அல்லாஹ் ஏற்படுத்தி வைத்துள்ளான். அவன்பக்கம்

நெருங்கக்கூடிய ஒரு பாதையை அமைத்துக் கொடுத்துள்ளான். அதுவே நன்றி செலுத்தும் வழியாகும் அதன் காரணமாக இவ்வுலக செல்வங்களுடன் சேர்த்து மறுவுலக அருட்பாக்கியங்களையும் ஒட்டு மொத்தமாக அள்ளிக் கொள்கிறான். அவ்வாறே ஏதேனும் ஒரு துன்பமோ, நெருக்கடியோ, மனதிற்கு வெறுப்பான காரியமோ நடந்துவிட்டால் அதிலும் அவன் நன்மை அடைந்து கொள்வதற்கான வழியை அல்லாஹ் வகுத்துள்ளான். அச்சூழலில் அவன் பொறுமையின் வழியில் சென்றால், எண்ணிலடங்கா நன்மைகளையும் நற்கூலிகளையும் பெற்றுக் கொள்வதுடன் மறுமையில் மதிப்பிட முடியாத அல்லாஹ்வின் பொக்கிஷங்களையும் அள்ளிக் கொள்வான்.

எனவே, இறைநம்பிக்கையாளனுக்கு ஏற்படக்கூடிய எல்லா சூழ்நிலைகளும் வியக்கத்தக்கனவாகவே உள்ளன. அவனது செயல்பாடுகள் அனைத்தும் முழுக்கமுழுக்க அவனுக்கு நன்மையளிக்கக்கூடியதாக சாதகமானதாகவே அமைந்துவிடுகின்றன.

நன்றி, பொறுமை என்பது நமது சிந்தனையிலும் மனதிலும் செயல்பாடுகளிலும் ஏற்படக்கூடிய ஒரு வித பண்புகளாகும். அவை மிக ஆழமான விரிவான பொருள் கொண்டதாகும். அவற்றை உரிய முறையில் விளங்குவது அவசியமாகும். நாம் அவற்றைக் கடைப்பிடித்து வாழ்வோமானால் நமது வாழ்வில் நடக்கும் எண்ணற்ற துன்பங்களும் வேதனைகளும் இன்பமானவையாக மாற ஆரம்பித்துவிடும். கவலைகள் மறந்து, மகிழ்ச்சி மலரத் துவங்கிவிடும்.

நன்றி என்றால் என்னவென்று நாம் விளங்கிக் கொள்ள



வேண்டியதில் முக்கியமான விஷயம், நமக்குக் கிடைக்கக்கூடிய அனைத்தும் அல்லாஹ்வின் புறத்திலிருந்தே கிடைக்கின்றன. அவன்தான் அனைவருக்கும் அனைத்தையும் கொடுத்துக் கொண்டிருக்கிறான். நம்மிடமுள்ள எல்லாப் பொருட்களும் செல்வங்களும் அவனால் வழங்கப்பட்டவையே. வாரி வழங்கியவனுக்கு முன்னால் தலைகுனிந்து நன்றி செலுத்தும் உணர்வு பிறக்கவேண்டும். என்னிடம் இருப்பவை அனைத்தும் அவன் கொடுத்தவையே என்று கூறி, நாவாலும் நன்றியை வெளிப்படுத்த வேண்டும். அவன் விரும்பக்கூடிய, பொருந்திக் கொள்ளக் கூடிய முறைகளில் மட்டுமே அவன் வழங்கியச் செல்வங்களை செலவிடவேண்டும். அவனுக்கு பிடித்தமில்லாத வழிகளை அறவே பயன்படுத்தக்கூடாது. இந்த மூன்று அம்சங்களும் நன்றி செலுத்துதல் என்ற அர்த்தத்தில் அடங்கிவிடும்.

மார்க்கத்திலுள்ள எல்லா அம்சங்களின் அடிப்படை இந்த நன்றி செலுத்துதல்தாம். எனவேதான் அல்லாஹ் மனிதர்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக இறக்கியருளிய அருள்மறையாம் குர்ஆனில் அல்ஹம்துலில்லாஹ் என்ற வார்த்தையால் துவங்கியிருக்கிறான். அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் என்பது அதன் அர்த்தம். மிக விரிவான பொருள் கொண்ட இந்த வார்த்தை, மறுமையில் நன்மை-தீமை நிறுக்கப்படும் தராசு (மீஜான்) தட்டு தாழ்ந்து விடுமளவிற்கு கனமுடையதாகும். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி அவனோடு தொடர்பு வைத்துக் கொள்வது, வாழ்க்கையின் எல்லாக் கட்டங்களிலும் எல்லா சந்தர்ப்பத்திலும் நிலைத்து நிற்கவேண்டிய ஓர் அம்சமாகும்.

இந்த தொடர்பு நாம் உயிருள்ளவரை தொடர்ந்து எப்போதுமே இயங்கிக் கொண்டிருக்க வேண்டிய தொடர்பாகும்.

## அல்லாஹ்வின் பேருபகாரம்

அல்லாஹ்வுக்கு நன்றி பாராட்டுவதை எல்லா நேரத்திலும் தொடர்ந்து செய்யவேண்டும் என்று கூறக் காரணம் என்னவெனில், நம் மீது அல்லாஹ்வின் அருள், அவனது உபகாரம் என்பது இல்லை என்றொரு நேரமே கிடையாது. ஒவ்வொரு நொடிப் பொழுதும் நமது உடலுக்குள் சென்று வருகின்ற இந்த மூச்சுக் காற்றும் அவனால் வழங்கப்பட்ட பேருபகாரமாகும். அவன்தான் நமது உடலுக்குள் ஓர் இயந்திரத்தையும் வைத்துள்ளான். அது தான் வெளியிலுள்ள காற்றை உள்ளுக்குள் இழுத்து, இரத்தத்தை சுத்தம் செய்துவிட்டு, அந்த அழுக்குக் காற்றை வெளியில் அனுப்பிவிடுகிறது. அந்த இயந்திரம் எவ்வித தடையுமின்றி சீராக, சரியாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்றால் அதுவும் அவனது பேருபகாரமாகும். எவ்வித கட்டணமோ, பிரதிபலனோ இல்லாமல் நம்மைச் சுற்றி நாலாப்புறமும் காற்று சூழ்ந்திருக்கும் ஒரு சூழலை அவன் ஏற்படுத்தியுள்ளான். நாம் உயிர் வாழ்வதற்கு அந்த சூழலும் அவசியமானதாகும். இதுவும் அவனது உபகாரமாகும். உள்ளுக்குள் இழுத்து, வெளியே விடக்கூடிய அந்த மூச்சுக் காற்றைப் பற்றி நாம் சற்று சிந்தித்தாலே போதும், அவனுக்கு அவசியம் நன்றி செலுத்திட வேண்டும் என்ற உள்ளுணர்வு வந்துவிடும். மனதிலும் நாவிலும் அவனுக்கு



நன்றி பாராட்டி, செயலிலும் அதை வெளிப்படுத்துவது அவசியம் என்ற எண்ணமும் நிச்சயம் நமக்கு வந்துவிடும். நமது வாழ்வில் உயிர்மூச்சு நின்றுவிடாமல் எந்நேரமும் ஓடிக் கொண்டேயிருக்கிறது. அது நின்றுவிட்டால் வாழ்கையே முடிந்துவிடும்.

இது மட்டுமே அல்லாஹ்வின் உபகாரம் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. இது தவிர இன்னும் ஏராளமான பேருபகாரங்கள் நம்மைச் சுற்றி நிரம்பியிருக்கின்றன. எனவேதான் மனிதர்களுக்கு அல்லாஹ் செய்திருக்கும் உபகாரம் எவ்வளவு? என்பது பற்றி குர்ஆனில் கூறும் போது, அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தால், அதனை உங்களால் கணக்கிட முடியாது. *(14:34)* என்று கூறுகிறான்.

எண்ணிலடங்கா அல்லாஹ்வின் அருட்கொடைகள் எந்நேரமும் எல்லா நிலையிலும் நமக்கு கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன. அவன் பல அருட்கொடைகளை குறிப்பிட்ட சிலருக்கோ, ஒரு கூட்டத்தாருக்கோ இல்லாமல் உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவுடைமையாக இறக்கி வைத்துள்ளான். அதனால் அவை அவனது உபகாரம், அருட்கொடை என்ற உணர்வுகூட நமக்கு இல்லாமல் போய்விட்டது. பொதுவாக, எப்பொருள் எவரிடமும் யாசிக்காமல், எவ்வித முயற்சியும் செய்யாமல் எல்லா நேரமும் எளிதாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அதன் அருமை நம் மனதிலிருந்து நீங்கிவிடுகிறது. நமக்குக் கிடைத்துக் கொண்டிருப்பவை மிகப் பெரிய அருட்கொடை, என்ற எண்ணம் சிறிதளவு கூட மனதில்

தோன்றுவதில்லை. ஆனால் அந்த அருட்கொடைகளில் ஒன்று மனிதனுக்கு கிடைக்காமல் போய்விட்டால், அல்லது அனுபவிக்கமுடியாமல் தடுக்கப்பட்டுவிட்டால் பிறகு அவன் அழுது புலம்ப ஆரம்பித்துவிடுகிறான். எப்படியாவது அதைப் பெற்றுக் கொண்டுவிடவேண்டும் என்று துடிதுடித்து விடுகிறான். தனது எதிர்காலத்தை பற்றி பயந்து அங்கலாய்கிறான். தனது சோதனை, துன்பத்தை பிறரிடம் சொல்லி அழ ஆரம்பித்துவிடுகிறான்.

அல்லாஹ் வழங்கிய ஒவ்வொன்றும் எவ்வளவு பெரிய அருட்கொடை என்பதை அவனது இந்த கோலமே பறைசாட்டுகிறது. கண் வலி வந்துவிட்டால் மனிதன் நிம்மதியாக இருப்பதில்லை. உடம்பில் எங்கேனும் வலி ஏற்பட்டுவிட்டால், அவனால் அமைதியாக இருக்க முடியாது. இப்பக்கம் அப்பக்கமாக புரண்டு புரண்டு படுப்பான். எந்த வேலையையும் அவனால் செய்ய முடியாது. அவனது காதில் வலி வந்தாலும் இதே நிலைதான்.

மனிதனின் உணவுக் குழாயில் ஏதேனும் அடைப்பு ஏற்பட்டுவிட்டால் அப்போதுதான் அதன் மகிமை தெரிய வரும். கடும் வறட்சி, பஞ்சம் ஏற்பட்டாலோ அல்லது வெள்ளம் வந்து பாதித்துவிட்டாலோ அப்போதுதான் ஒவ்வொருவருக்கும் அல்லாஹ்வின் ஞாபகம் வரும். குர்ஆன் கூறுவதைப் போன்று நாள்தோறும் மாறி மாறி வந்து செல்லக்கூடிய இரவிலும், பகலிலும் எண்ணற்ற பல நன்மைகள், பயன்கள் நமக்குண்டு. ஆனால் அவைகளை நாம் பெரிதாக எண்ணுவதில்லை. பகலே இல்லாமல் இரவு மட்டும் நீடித்துக் கொண்டிருந்தால் அல்லது இரவே



இல்லாமல் பகல் மட்டும் இருந்து கொண்டிருந்தால் அப்போது தான் இரவு, பகலின் மதிப்பு நமக்கு விளங்கும். இந்த எல்லா அருட்கொடைகளும் நம் அனைவருக்கும் பொதுவானதாக, கேட்காமல் கிடைத்துக் கொண்டிருப் பதால் அவைகள் பேருபகாரம் என்ற உணர்வு நம்மிட மிருந்து போய்விடுகிறது.

பொதுவான இந்த அருட்கொடைகள் தவிர, தனிப்பட்ட முறையில் அல்லாஹ் வழங்கிய அருட் பாக்கியங்களும் ஏராளமாக உள்ளன. அவன் தனது அடியார்கள் அனைவருக்கும் கணக்கின்றி ஏராளமான அருட்கொடைகளை வழங்கி உபகாரம் செய்திருந்தாலும், நம்மில் எவர் தன் கண்களை மூடிக் கொண்டு, பிறப்பி லிருந்து இதுவரை தன் கடந்த கால நாட்களைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பாரோ அவரால் மட்டுமே அல்லாஹ் வழங்கிய பிரத்தியேகமான உபகாரங்களை உணர முடியும். பிறப்பிலிருந்து இதுவரை கழிந்துபோன வாழ்நாட்களைப் பற்றி யோசித்துப் பார்த்தால், அவற்றில் எண்ணற்ற பல அருட்கொடைகள் தமக்கு மட்டும் விசேஷமாக வழங்கப்பட்டவையாக இருக்கும். ஒவ்வொரு மனிதனும் அல்லாஹ் தமக்கு செய்த அந்த பேருபகாரங்களை எண்ணிப் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும். அல்லாஹ்வின் அருட்கொடையை எப்போதும் நினைத்துப் பார்க்கும் மனிதனால் மட்டுமே ஒவ்வொரு வினாடியும் நன்றி செலுத்த முடியும்.

ஆரம்பத்தில் கண்ட ஹதீஸில் இன்னொரு முக்கிய மான விசயமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இறை நம்பிக்கையாளனுக்கு எப்போதாவது ஒரு சந்தோஷமான

செய்தி கிடைத்துவிட்டாலோ அல்லது மகிழ்ச்சியூட்டும் சம்பவம் நடந்துவிட்டாலோ உடனே அவன் அதற்காக நன்றி செலுத்தும் வகையில் செயல்படுவான். இவையெல்லாம் எனது திறமையினால், எனது சாதுரியத்தால் கிடைத்ததாகும். இவை என் விதியில் எழுதப்பட்டவை தான். எனது மதி நுட்பத்தால் இந்த பிரச்சினையைத் தீர்த்து சாதித்துவிட்டேன் என்றெல்லாம் மார்தட்டிக் கொள்ளும் செயல்பாடுகளில் இறங்கமாட்டான். மேலும், முன்பே நான் நினைத்த மாதிரி எனக்கு நல்ல இலாபம் கிடைத்துவிட்டது என்றும் கூறமாட்டான். நல்லவேளை அந்த காலத்திலேயே நான் இந்த பிளாட்களை வாங்கியிருந்தேன். வியாபாரத்தில் பணம் போட்டிருந்தேன். அதனால்தான் இப்போது நிறைய காசு பார்க்கிறேன். எனக்கு அப்போதுதான் வியாதி இருப்பது தெரியவந்தது. உடனே மருத்துவரிடம் சென்றேன். அவர் மருந்து கொடுத்தார். உடல் நல்ல சுகமாகிவிட்டது என்றெல்லாம் கூறமாட்டான். ஓரிறைவன் மீது நம்பிக்கைக் கொண்ட உண்மையான அடியான் பௌதிக காரணத்தைத் தேடி அலையமாட்டான். எந்த அருட்கொடைகள் கிடைத்தாலும் அவை அல்லாஹ்வின் புறத்திலிருந்தே கிடைத்தது என்று மனதார நம்புவான். அதற்காக அவனுக்கு நன்றி செலுத்த ஆயத்தமாகுவான்.

எனவே அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவோரின் மனம் இத்தகைய உணர்வுகளால் நிரம்பியிருப்பதும் நன்றி செலுத்துவதினால் கிடைக்கும் நற்பலனாகும். அல்லாஹ்வின் மீது பிரியம் கொள்ளக்கூடிய தொடர்பும் அதன் மூலம் உண்டாகிறது. அல்லாஹ்வின் கரமே தன்னை



அரவணைத்து தாங்கிப் பிடித்துள்ளது. அவனே தனக்கு எல்லாவற்றையும் கொடுத்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வும் நன்றி செலுத்துவதால் உண்டாகிறது.

## முழுமையான நன்றி எது?

நன்றி பாராட்டுதல் என்பது தனக்கு கிடைத்துள்ள அனைத்தும் அல்லாஹ்வினால் வழங்கப்பட்டவையே என்று மனதில் நினைப்பதற்கு மட்டும் சொல்லப்படுவதில்லை. அல்லது உட்காரும் போதும், எழுந்திருக்கும் போதும், படுக்கும் போதும் அல்லாஹ்வின் அருளை நினைவு கூர்ந்து, அவனைப் புகழ்ந்து 'அல்ஹம்துலில்லாஹ்' என்று கூறுவதற்கு மட்டும் சொல்லப்படுவதில்லை. மாறாக, மனதில் நினைத்து நாவில் மொழியும் வார்த்தைக்குத் தோதாக அவனது செயல்பாடுகளும் அமைந்திருக்கவேண்டும். தனது செயல்பாடுகள் மூலமாக அல்லாஹ்வுக்கு நன்றியை வெளிப்படுத்துவதுதான் அசலாகும். அந்த நன்றியைத் தான் அல்லாஹ் நம்மிடம் எதிர்ப்பார்க்கிறான். 'தாவூது (அலை) அவர்களின் வழித்தோன்றல்களே! நன்றி செலுத்தும் வகையில் செயலாற்றுங்கள்' (அல்குர்ஆன் *34:13*) என்று கூறுகிறான்.

நமக்கு வழங்கப்பட்டவை அனைத்தும் அல்லாஹ்வின் அருட்கொடை என்பதற்கு நம்முடைய செயல்கள் சாட்சி சொல்லவேண்டும். அவ்விதமாக நம் அமல்கள் இருக்கவேண்டும். நமக்கு வழங்கப்பட்டுள்ள செல்வங்கள், பொருட்கள், மற்ற ஏனைய அனைத்தையும் அவனது விருப்பத்திற்கு மாற்றமாக, அவனது

கட்டளைக்கு மாற்றமாக செலவழிக்கக் கூடாது. பயன்படுத்தக்கூடாது. மாறாக, அவன் விரும்பியவாறு, அவன் சொன்னபடி, அவன் கட்டளையிட்டபடி பயன்படுத்தவேண்டும். அதுமட்டுமல்ல, இவ்வுலகிலுள்ள எல்லா செல்வங்களும் அல்லாஹ்வின் அருளாகும். எனவே அவற்றை நாம் அடைந்து கொள்வதும், பெற்றுக் கொள்வதும்கூட அவன் விரும்பிய வழியில்தான், அவன் அனுமதித்த வழியில்தான் இருக்க வேண்டும். அவன் தடுத்துள்ள, அவனுக்கு வெறுப்பான வழிகளில் அவற்றை அடைய முயலக் கூடாது.

மனம், நாவு, செயல் அனைத்தும் ஒன்றிணைந்து செயலாற்றும்போதுதான் உண்மையில் அது நன்றி செலுத்துவதாக அமையும். இவ்வாறு நன்றி செலுத்து வோர் மிகக் குறைவாகத்தான் இருப்பார்கள். எனவே தான் அல்லாஹ் திருமறையில் சொல்லிக் காட்டுகிறான்: எனது அடியார்களில் உண்மையாக நன்றி செலுத்துவோர் மிகக் குறைவாகவே உள்ளனர். *(34:13)*

தமக்குத் தேவையானவற்றைக் கொடுத்து, உபகாரம் செய்பவன் அல்லாஹ்தான் என்று என்னை ஏற்றுக் கொண்டு, எனது கட்டளைக்கு உடனே தலைசாய்த்து நன்றி செலுத்துவோர் எனது அடியார்களில் மிகக் குறைவாகவே உள்ளனர். அவர்களின் உள்ளங்களில்தான் நன்றி என்பது நிறைவாக உள்ளது. அவர்கள்தான் செயல் வடிவில் நன்றி செலுத்துகின்றனர்.

வாழ்க்கை எளியதாக அமைந்திட, மனம் நிம்மதி, அமைதியுடன் திகழ, நன்றி செலுத்தும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். அவ்வழியில் செல்வோர்



எல்லா நேரமும் எல்லா சந்தப்பத்திலும் மகிழ்ச்சியில் கழிப்பர். மனக் கவலை, மன சஞ்சலத்தில் மாட்டிக் கொள்ளாமல் மனமகிழ்வோடு வாழ்வர். நீங்களே சற்று சிந்தித்துப் பாருங்கள். காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வின் பொக்கிஷங்கள் என் வீட்டில் பொழிந்து கொண்டிருக்கின்றன. அவனது அருட்கொடைகள் இரவுபகலாக என் மீது கொட்டுகின்றன என்று ஒருவர் எண்ணினால், சொந்தம், பந்தமாக இருக்கட்டும் வியாபாரமாக இருக்கட்டும் தொழில்துறைகளாக இருக்கட்டும் அல்லது வியாதி வந்த பின் கிடைக்கும் ஆரோக்கியமான நல்ல வாழ்வாகட்டும் அனைத்துமே அல்லாஹ்வின் புறத்திலிருந்தே கிடைக்கின்றன என்று ஒருவர் நினைப்பாரானால், அவருக்கு வாழ்வின் எல்லா நிலையுமே சந்தோஷமாகத்தான் இருக்கும். மனஅமைதி என்பது அவரோடு எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். நன்றி செலுத்துவது மனநிம்மதிக்கு மூலக் கருவாகவும் இருக்கிறது.

## பொறுமையின் பொருள்

ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட ஹதீஸில் மற்றொரு பகுதி கூறும் செய்தி இறைநம்பிக்கையாளனுக்கு வெறுப் பான பிடித்தமில்லாத சூழ்நிலை வந்துவிட்டால் ஏதேனும் நோய் அல்லது துன்பம் வந்துவிட்டால் அவன் பொறுமை மேற்கொள்வான் என்பதாகும். பொறுமை என்பதும் சாதாரணமான அமல் அல்ல. அதிலும் எண்ணற்ற நற்கூலியை அல்லாஹ் வைத் துள்ளான். அதிலும் இறைநம்பிக்கையாளனுக்கு

நன்மைக்கு மேல் நன்மையுண்டு. பொறுமைக்கு அரபி மொழியில் ஸப்ரு என்று சொல்லப்படும். ஸப்ரு என்றால் அகராதியில் தடுத்துக் கொள்ளல் என்று பொருள். அதாவது துன்பத்தின்போது மனிதன் அழுது புலம்பாமல் இருந்துவிடுவதற்கு மட்டும் பொறுமை என்று சொல்லப்படமாட்டாது. மாறாக, அல்லாஹ்வுக்கு விருப்பமில்லாதவற்றை செய்யாமல் தன்னை தடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். துன்பத்தின்போது ஒப்பாரி வைத்து அழுது புலம்புவது அல்லாஹ்வுக்கு பிடித்தமில்லாததாகும். துன்பம், துயரங்களெல்லாம் அல்லாஹ் அல்லாத மற்ற சக்திகளின் மூலமாகத்தான் வருகிறது என்று நினைப்பதும் அல்லாஹ்வுக்கு விருப்ப மில்லாததாகும். மாறாக, துன்பத்தின்போது ஒப்பாரி வைத்து அழுதுபுலம்பாமல் இதுவும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்ததுதான் என்று எண்ணி, தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதுதான் பொறுமையாகும்.

நீங்கள் நன்கு சிந்தித்துப் பார்த்தால் மனித வாழ்வின் இரண்டு நிலைகளிலும் பொறுமையை கடைப்பிடிப்பது கட்டாயம் என்பது தெரியவரும். ஒன்று, மனிதனின் கட்டுப்பாட்டில் இல்லாத, அவனது சக்திக்கு உட்படாத நிலைமை. அதாவது, அவனால் தாங்கமுடியாத அளவு மனக் கவலை ஏற்படும் நிலை. அதாவது, அவனுக்கு விருப்பமான ஒருவர் மரணித்துவிடுவது. அல்லது அவனது குழந்தைகளில் ஒன்று இறந்துவிடுவது. வியாபாரத்தில் பெருமளவு நஷ்டமாகிவிடுவது. உடம்பில் ஏதேனும் ஒரு பகுதியில் ஆபத்தை விளைவிக்கும் விதத்தில் கட்டி ஒன்று வந்துவிடுவது. அல்லது உயிருக்கு ஊறு



விளைவிக்கக்கூடிய பெரிய நோய் ஒன்று வந்துவிடுவது. இவையெல்லாம் மனிதனின் விருப்பத்திற்கும் அவனது சக்திக்கும் அப்பாற்பட்ட விசயமாகும். அல்லாஹ்வின் விருப்பத்தில் கட்டுப்பட்டதாகும். மனிதனை சோதித்துப் பார்ப்பதற்காக அல்லது பயிற்றுவிப்பதற்காக அல்லாஹ் ஏற்படுத்திய ஏற்பாடுகளில் உள்ளவையாகும்.

பொதுவாக மனிதர்களின் சிந்தனையைக் குழப்பிக் கொண்டே இருக்கும் விசயம் யாதெனில், வாழ்க்கையில் கவலை, பிரச்சினை, மனவேதனை ஏன் ஏற்படுகிறது? என்பதுதான். இதனால் அல்லாஹ்வுக்கு என்ன கிடைக்கப் போகிறது? அவன் நம் பிரச்சினைகளை நீக்கிடவும், வராமல் தடுக்கவும் சக்தியுடையவன் இல்லையா? என்ற கேள்விகள்தாம் நம் மனதில் எழும்பிக் கொண்டே இருக்கும். இதற்கு முன்பு நாம் ஒரு விசயத்தை நன்கு புரிந்து, மனதில் இருத்திக்கொள்ளவேண்டும்.

படைத்தவனுக்கு என்ன கிடைக்கப் போகிறது? என்று படைக்கப்பட்ட மனிதன் கேள்வி கேட்பதே கூடாது. அது அவனுக்கு தேவையில்லாத ஒன்றாகும். ஏனெனில், தன்னைப் போன்றே நினைத்துக் கொண்டு படைத்த வனுக்கு என்ன கிடைக்கும்? என்ன கிடைக்காது என்று சிந்திக்கிறான். பொதுவாக வியாபாரம், கொடுக்கல் - வாங்கல் போன்றவற்றில் நமக்கு இதில் என்ன இலாபம் கிடைக்கும்? என்ன நஷ்டம் ஏற்படும்? கையில் என்ன கிடைக்கும்? என்ன மிஞ்சும்? என்பதைத்தான் நாம் யோசிப்பதுண்டு. ஆனால் படைத்தவனாகிய அல்லாஹ் வுக்கு இவையெல்லாம் தேவை கிடையாது: அவன் எல்லாத் தேவைகளை விட்டும் நீங்கியவன். உயர்ந்தவன்.

இறைவனுக்கு என்னென்ன கிடைக்கும் என்பதைப் பற்றி மனிதனால் சிந்திக்கவே முடியாது. ஏனெனில் மனிதனின் சிந்தனை குறிப்பிட்ட வரையறைக்குள் உட்படுத்தப்பட்டது. அல்லாஹ்வின் பண்போ வரை யறையற்றது. எனவே வரையறைக்குள் உட்பட்ட மனிதனால் வரையறையில்லா ஒன்றை அறிந்து கொள்ளவே முடியாது. ஆகவே, தனது அடியார்களுக்கு துன்பம் கொடுப்பதால் அல்லாஹ்வுக்கு என்ன கிடைக்கப் போகிறது? என்று மனிதன் கேள்வி கேட்டுக் கொள் வதற்குப் பகரமாக, நமக்கு என்ன கிடைக்கும் என்று அவன் கேட்டுக் கொள்வதுதான் சிறந்ததாகும்.

வளமும் உயர்வும் கொண்ட அல்லாஹ் இவ்வுலக வாழ்வைப் பற்றி பொதுவிதி ஒன்றைத் தெளிவு படுத்தியுள்ளான். ஒருவரிடம் வளமும் செழிப்பும் எப்போதும் நிரந்தரமாக இருப்பதில்லை. அவ்வாறே கவலையும் துன்பமும் வியாதியும் வேதனையும் நிரந்தரமாக இருப்பதுமில்லை. காலம் என்ற ஆறு நிற்காமல் ஓடிக் கொண்டேதான் இருக்கும். அதில் துன்பம் மட்டும் மனிதனைப் பிடித்துக் கொண்டே நின்றிருக்காது. என்றைக்காவது ஒரு நாள் மரணம் அவனை வந்தடைந்து அவனது எல்லா துன்பங்களையும் முடிவுக்குக் கொண்டுவந்துவிடும். அதே போன்று வளமான வாழ்க்கையும் ஒரு மனிதனைப் பிடித்துக் கொண்டு நிரந்தரமாக இருக்காது. மனிதர்களில் எவர் அதிகம் நன்மை செய்து நன்முறையில் நடந்து கொள்கிறார் என்பதை பரிசோதித்துப் பார்ப்பதற் காகத்தான் அல்லாஹ் எதையும் வாழ்வில் நிரந்தரமாகக் கொடுப்பதில்லை.



உங்களில் எவர் அழகான செயல் புரிபவர் என்பதை சோதித்துப் பார்ப்பதற்காகவே அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான். (அல்குர்ஆன் 67:2)

அல்லாஹ்வினால்தான் நீங்கள் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். அவன்தான் உங்களை பராமரித்துக் கொண்டிருக்கிறான். அவன் உங்களை சோதிக்கவும் செய்கிறான். எனவே நீங்கள் நல்ல வழியையே தேர்ந் தெடுங்கள். நன்மையே செய்யுங்கள். உங்களுக்கு கிடைத்துள்ள இந்த வாழ்க்கை ஒரு சில நிமிடங்கள்தாம். நிரந்தரமானதல்ல. நீங்கள் பெற்றிருக்கும் அருள் வளங் களும் முடிந்துவிடக் கூடியவையே. உங்களுக்கு ஏற்படும் துன்பங்களும் துயரங்களும் அழிந்துவிடக் கூடியவையே.

இவ்வுலகில் மனிதர்களுக்கு ஏற்படும் எல்லா காயங் களையும் அவர்களின் மரணம் ஆற்றி குணப்படுத்தி விடுகிறது. இறுதியாக இவ்வுலகிலுள்ள எல்லாம் அழிந்து விடக்கூடிய ஒரு நேரமும் வந்துவிடும். ஆனால் எவர் பொறுமையை கடைப்பிடித்து வாழ்கிறாரோ அவருக்கு எண்ணற்ற நற்கூலியை நாம் தயார் செய்து வைத்துள் ளோம் என்றும் கூறுகிறான். அல்லாஹ்விடத்தில் இருப்பவை எப்போதுமே நிரந்தரமாக இருக்கும்.

கவலை, துன்பம், வேதனையான சூழ்நிலையை நமக்குக் கொடுக்கும்போது அல்லாஹ்வுக்கு என்ன கிடைக்கப் போகிறது என்று கேள்வி கேட்பது அர்த்த மற்றது. ஏனெனில் அந்த சூழ்நிலை அனைத்துமே தற்காலிகமானது. உங்களைச் சோதிப்பதற்காக அல்லது பக்குவப்படுத்துவதற்காக அத்தகைய நிலைமைகள் வரலாம். எனவே வளமான, சந்தோஷமான நிலைமை

களில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதையும் துன்பம், கவலையின் போது பொறுமையை கடைப்பிடிப்பதையும் நீங்கள் பழக்கமாக்கிக் கொள்ளவேண்டும். அப்போது தான், அழகிய நற்செயல் புரிந்தவர்களாக நீங்கள் அல்லாஹ்விடம் செல்ல முடியும்.

மனிதனின் வாழ்வில் எவ்வித துன்பமும் நேரிடா விட்டால் அவன் கடிவாளமின்றி ஓடும் குதிரை போன்று கட்டுக்குள் இல்லாமல் தலைக்கனம் பிடித்து திரிவான். தனக்கு வழங்கப்பட்ட செல்வங்கள் அல்லாஹ்வினால் அருளப்பட்டவை என்ற உணர்வு அவனுக்கு இல்லையென்றாலும் தலைக்கனம் பிடித்து அடாவடித்தனம் செய்ய ஆரம்பித்துவிடுவான். மனிதனை நேரான பாதையில் நிலை நிறுத்துவதற்காகத்தான் அல்லாஹ் இந்த இரு நிலைகளையும் மனிதன் மீது சுற்ற வைத்துள்ளான். செல்வமிக்க வளத்தையும் கொடுக்கிறான். துன்பத்தையும் கொடுக்கிறான். நல்ல வளமான சூழ்நிலையின் போது மனிதன் நன்றி செலுத்த ஆரம்பித்தால் அல்லாஹ் அவனுக்கு மென்மேலும் எண்ணற்ற வளங்களை அள்ளித் தருகிறான். 'நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தி, இறை நம்பிக்கையுடன் வாழும் பாதையை தேர்ந்தெடுத்து விட்டால் அதன் பின்னும் உங்களை அவன் வேதனை செய்யவானா? நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்.' (2:153) அல்லாஹ் பொறுமைக்கும் எண்ணற்ற நற்கூலியை வழங்குகிறான். எனவே நன்றியும் பொறுமையும் மனிதனின் உள்ளம், சிந்தனை, அறிவு அனைத்தும் சரியான பாதையில் இயங்கிக் கொண்டிருப்பதற்கான அடையாளமாகும்.



எனவே பொறுமை மேற்கொள்ள வேண்டிய இரு நிலைகளில் ஒன்று, துன்பம், துயரங்கள் நோய் போன்றவை ஏற்படும் போதாகும். அவை நமது விருப்பதற்கும் சக்திக்கும் அப்பாற்பட்ட நிலைமையாகும். அல்லாஹ்வின் புறத்திலிருந்து வரக்கூடியவை.

மற்றொன்று, மனிதனின் விருப்பத்திற்கும் அவனது சக்திக்கும் உட்பட்ட நிலைமையாகும். அதாவது, அல்லாஹ்வின் கட்டளைக்கு நாம் வழிபடுவது. அவன் தடுத்துள்ளவற்றிலிருந்து விலகியிருப்பது. இவற்றை செய்வதற்கும் பொறுமை அவசியமாகும். அரபியில் ஸப்ரு என்றால் தன் இடத்தை விட்டும் நகராமல் அங்கேயே நின்று கொள்வதற்கும் சொல்லப்படும். அல்லாஹ்வுக்கு பிடித்தமில்லாத பாதைகளில் செல்லாமல் தன்னை தடுத்துக் கொள்வது. தன்னைத் தானே கட்டிப் போட்டுக் கொள்வது. அல்லாஹ்வுக்கு வழிபடுவதும், கட்டுப்படுவதும் அவனுக்கு மாறு செய்வதும், கட்டளையை புறக்கணிப்பதும் நமது விருப்பத்தில் உள்ளவையாகும். நமது சக்திக்கு உட்பட்டவையாகும். அவனது கட்டளைக்கு வழிபடுவதற்கும் அவன் தடுத்துள்ளவற்றிலிருந்து விலகியிருப்பதற்கும் பொறுமை அவசியமாகும். பொறுமையைக் கடைப்பிடித்து நம்மை நமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் தான் நற்செயல்களும் புரியமுடியும். பாவத்திலிருந்தும் விலகியிருக்க முடியும்.

## அழகிய பொறுமை

பொறுமைக்கும் நன்றிக்கும் மத்தியில் ஆழமான

தொடர்பு உண்டு. வளமும் நலமும் கிடைத்திருக்கும் போது அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கும் பொறுமை அவசியமாகும். ஏனெனில் அந்நிலையில் வரம்பு மீறிச் சென்று அல்லாஹ்வுக்கு புறம்பான காரியங்களில் ஈடுபடாமல் இருக்கவேண்டுமானால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பொறுமையை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறே மனிதனுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்துவிட்டால் அந்த துன்பத்திலும் நன்றி செலுத்தும் போதுதான் அது அழகிய பொறுமையாக, சிறந்த நன்றியாக அமையும்.

நன்கு சிந்தித்துப் பார்த்தால், பொறுமை, நன்றிக்கு மிடையில் ஆழமான தொடர்பு இருப்பது தெரியவரும். ஒரு மனிதன் மீது அல்லாஹ்வின் அருள்வளங்கள் கொட்டிக் கொண்டேயிருக்கிறது. அம்மனிதன் அந்த அருட்கொடையின் மூலம் தன் இரட்சகனை மறந்து விடாமல் அவனை நினைத்துக் கொண்டே இருக்க வேண்டுமாயின், தான் யார் என்பதை அவன் மறந்து விடக்கூடாது. தனக்கு கிடைத்துள்ள இந்த அருட் கொடைகள் தனது கையால் சம்பாதித்தவை என்ற எண்ணம் வந்துவிடக் கூடாது. செல்வ வளமும் உடல் நலமும் அதிகமாகும் போது மனிதன் தன்னையே மறந்து விடுவான். தன் திறமையால் பெற்றவை என்று பெருமை கொள்வான். இத்தகைய எண்ணத்தின் பக்கம் செல்லாமல் தன்னைத் தடுத்துக் கொள்ளவேண்டும். செல்வம் பெருகும் போது மற்றவர்களை அலட்சியப்படுத்துவான். பிறர் மீது அநியாயம், அட்டூழியம் செய்வான். அவனது செல்வமே அவனைத் தூண்டும். அத்தகைய தீய செயல்களிலிருந்தும் தன்னைத் தடுத்துக் கொள்ளவேண்டும். பணம்



பாவத்தைச் செய்யத் தூண்டும்போது அதை செய்யாமல் பொறுமையாக இருப்பதுதான் அருட்கொடைகளுக்கு செய்யக்கூடிய உயர்வான நன்றி செலுத்துதலாகும். பொறுமையைக் கடைப்பிடிக்காத மனிதனால் நன்றி செலுத்துவதில் உயர்வான அந்தஸ்தை அடைய முடியாது. பொறுமையைக் கடைப்பிடிக்கும் மனிதனால் மட்டும் நன்றி செலுத்தி உயர்வான அந்தஸ்தை அடைய முடியும். பொறுமையின் உயர்வும் நன்றியின் உயர்வும் ஒன்றுக்கொன்று குறைந்ததல்ல.

ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளதாவது: ஒருவர் வயிறு நிரம்ப சாப்பிடுகிறார்; குடிக்கிறார்; அல்லாஹ் வுக்கு நன்றியும் செய்கிறார். அவரின் அந்தஸ்தும் பொறுமையுடன் நோன்பு நோற்ற ஒருவரின் அந்தஸ்தும் சமமானதாகும். ஏனெனில் இரண்டு நிலையிலும் மனிதன் தன்னை கட்டுப்பாட்டில் வைத்திருந்தால்தான் அவ்வாறு செய்யமுடியும். ஒருவர் மீது அல்லாஹ்வின் அருட்கொடை பொழிந்தால்அவர் அதை அல்லாஹ்வின் அருட்கொடை என்று விளங்கி பயன்படுத்தவேண்டும். சாப்பிடவேண்டும். குடிக்கவேண்டும். அதற்குரிய கடமையை நிறைவேற்றவேண்டும். அவனது உள்ளமும் நன்றி செலுத்தவேண்டும். அவனது நாவும் நன்றி செலுத்த வேண்டும். அவனது செயல்பாடுகளும் அல்லாஹ் சொன்ன வழிமுறைக்கு மாற்றமில்லாமல் இருக்க வேண்டும். இதுதான் உண்மையான நன்றி செலுத்து தலாகும்.

ஒருவர் வயிறாற நன்கு சாப்பிடுகிறார். பருகுகிறார். அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளை அனுபவிக்கவும்

செய்கிறார். அதே நேரத்தில் நன்றி செலுத்துவதையும் மறந்திடாமல் நிறைவேற்றுகிறார் எனில் அவர் அல்லாஹ் விடத்தில் அவனுக்காக பசித்திருந்து பொறுமையுடன் நோன்பு நோற்கும் நோன்பாளியைப் போன்று மதிப் புள்ளவராக ஆகிவிடுகிறார்.

பொறுமையைக் கடைப்பிடிப்பதிலும் முழுமையான அந்தஸ்து கிடைக்கவேண்டுமானால், இன்பம், துன்பம் நல்லது, கெட்டது எல்லாமே அல்லாஹ்வின் புறத்தி லிருந்தே வருகிறது என்று அவன் உறுதியாக மனதில் இருத்திக் கொள்ளவேண்டும். அல்லாஹ் எல்லா மனிதர்கள் மீதும் அதிகம் இரக்கம் கொண்டவன். அகிலத்தாரை படைத்து பரிபாலிப்பவன். அவன் ரஹ்மான் (அருளாளன்). அவன் ரஹீம் (அன்புடை யோன்).

குறிப்பாக, இறைநம்பிக்கையாளர்களின் விசயத்தில் மிகவும் இரக்கம்காட்டுபவன். திருமறை வசனம் கூறுகிறது. 'அவன் எப்போதும் இறைநம்பிக்கையாளர்கள் மீது மிகுந்த இரக்கமுடையவனாகவே இருக்கிறான்.' *(33:43)*. எனவே மிகவும் இரக்கம் கொண்ட அல்லாஹ் வின் புறத்திலிருந்து ஏதேனும் துன்பம் வந்தால் நிச்சயம் அதிலேயும் நன்மைக்குரிய அம்சம் இருந்தே தீரும்.

இறைநம்பிக்கையாளின் செயல்பாடுகள் அனைத்திலும் நன்மையே காணப்படுகிறது. அவை அவனுக்கு நல்ல தாகத்தான் அமையும் என்பதையே ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட ஹதீஸ் சுட்டிக் காட்டுகிறது. அல்லாஹ் வின் புறத்திலிருந்து அருட்கொடைகள் வந்தடைந்தால், செல்வ செழிப்பின் வாசல் திறக்கப்பட்டால் அதுவும்



அவனுக்கு நன்மைக்குரிய அம்சம்தான். ஏனெனில் அவன் அதற்காக நன்றி செலுத்துகிறான். அதன் மூலம் அதிக நன்மைகளை பெறுகிறான். ஏதேனும் துன்பம் நேரிட்டால் அதுவும் அவனுக்கு நன்மைக்குரிய அம்சம் தான். அதில் பொறுமை மேற்கொண்டு எண்ணற்ற நன்மைகளை அடைந்து கொள்கிறான். தனது சிறு குழந்தை இறந்துவிட்டால் அப்போது இறை நம்பிக்கை யாளன் அதைத் தாங்கிக் கொண்டு பொறுமை கொள்கிறான். அதன் பலனாக மறுமையில் அவனுக்கு நன்மை நிரம்பிய கருவூலம் ஒட்டு மொத்தமாகக் கிடைக்கும். இறைநம்பிக்கையாளன் இவ்வுலகில் எந்தவொரு விசயத்திற்காக பொறுமை மேற்கொண் டாலும் அதற்கான நன்மை கிடைக்காமல் இருப்ப தில்லை. எந்தளவிற்கென்றால் நபிமொழிகளில் காணப்படுகிறது: இறைநம்பிக்கையாளனின் உடலில் முள் குத்திவிட்டாலோ ஏதேனும் வலி ஏற்பட்டுவிட்டாலோ ஏதேனும் ஒன்று காணாமல் போய்விட்டாலோ திடீரென்று ஏற்பட்ட ஒரு பிரச்சினையால் மன சஞ்சலமடைந்தாலோ ஒரு பொருளை ஒரு இடத்தில் வைத்துவிட்டு, மறந்து போய், அதை எங்கு வைத்தோம் என்று தேடி அலைந்து மனஉளைச்சல் ஏற்பட்டாலோ அதற்கும் அல்லாஹ்விடம் நற்கூலியுண்டு; அவனது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன; நன்மைகள் எழுதப் படுகின்றன. இத்தகைய நேரங்களில் அவனது உள்ளம் அல்லாஹ்வுடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

ஒரு தடவை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொருள் ஒன்று தொலைந்து

போய்விட்டது. உடனே நபியவர்கள் நாம் அல்லாஹ்வுக்கே உரியவர். அவன் பக்கமே நாம் திரும்பிச் செல்பவர்கள் என்று ஓதிவிட்டு, இதிலும் அல்லாஹ் இறைநம்பிக்கையாளர்களுக்கு நன்மைக்கான வழி வைத்துள்ளான் என்று கூறினார்கள்.

## சோதனை ஏன்?

இவ்விதமாக ஓர் இறைநம்பிக்கையாளனின் வாழ்க்கை, எல்லா விதத்திலும் நன்மையால் சூழப் பட்டுள்ளது.. எந்நிலையிலும் நன்மை அவனை தேடி வருகிறது. அவனுக்கு விருப்பமான ஒன்று கிடைக்கும் போது அது அல்லாஹ்வின் மூலம் கிடைத்த அருட் கொடை என்று எண்ணி அதற்கு நன்றி செலுத்துகிறான். அதன் பலனாக அவனுக்கு அல்லாஹ்வின் புறத்தி லிருந்து நன்மை கிடைத்துவிடுகிறது. துன்பம் வந்து விட்டால் அதுவும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்ததுதான் என்று எண்ணுகிறான். அந்நேரத்தில் அழுது புலம்பாமல் பொறுமையுடன் அதைத் தாங்கிக் கொள்கிறான். இதன் பலனாகவும் அவனுக்கு நன்மை கிடைத்துவிடுகிறது. ஆனால் துன்பம் நேரும்போது பொறுமை காப்பதுடன், இன்பத்தில் நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதைப் போன்று துன்பத்திலும் நான் நன்றி செலுத்துகிறேனா? என்று என்னை பரிசோதித்துப் பார்ப்பதற்காக, நன்கு பயிற்றுவித்து என்னைப் பக்குவப்படுத்துவதற்காக இத்துன்பத்தை எனக்கு கொடுத்துள்ளான் என்று எண்ணி அதிலும் நன்றி செலுத்தினால் அதுதான் பொறுமையிலும் உயர்ந்த தரமாகும். நன்றி செலுத்துவதிலும் சிறந்ததாகும்.



நான் அவனை மறந்திருந்தேன். ஆனால் அவன் என்னுடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்காக இத்துன்பத்தைக் கொடுத்துள்ளான். இதில் நான் பொறுமை மேற்கொண்டால், அளவில்லா வெகுமதி எனக்கு அவன் வழங்க காத்திருக்கிறான். இதன் மூலம் எனக்கு அவனுடன் தொடர்பு ஏற்பட்டது, அவனது நெருக்கம் உண்டானதுதான் எல்லாவற்றையும்விட பெரிய வெகுமதியாகும் என எண்ணி, நன்றி செலுத்த வேண்டும். இதன் மூலம் அவனை நெருங்கும் பாக்கியம் எனக்கு கிடைத்துள்ளது. அவனுடனான தொடர்பும் நட்பும் எனக்கு கிடைத்துள்ளது. என்று மனதில் மனதார நினைப்பதுதான் உயர்தரமான பொறுமையும் நன்றியும் ஆகும். அதற்கு அல்லாஹ்விடம் உயர்ந்த நற்கூலியுண்டு.

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி வரலாற்று நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களின் தந்தை அப்பாஸ் (ரழி) அவர்கள் மரணமடைந்த பின், கிராமவாசி ஒருவர் அவர்களிடம் வந்தார். நகர்புறங்களில் வாழும் அரபியர்கள் பெரும்பாலும் எழுத படிக்கத் தெரியாதவர்களாகத்தான் இருப்பார்கள். அந்த கிராமவாசி அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடம் சிறு கவிதை ஒன்றைப் பாடினார். அதன் கருத்து மிக அழகானதாகவும் ஆழமானதாகவும் இருந்ததால், பிந்தைய நாளில் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள், ‘மக்களிடம் என் தந்தையின் மரணம் பற்றி என்னிடம் அவர் கூறியதைவிட மிகச் சிறந்த வார்த்தைகளை எவரும் கூறியதில்லை’ என்று கூறினார்கள்.

அப்பாஸ் (ரழி) அவர்களை தன் வசம் அழைத்துக் கொண்டவன், உங்களை விட மிகச் சிறந்தவன். நீங்கள் பொறுமையை மேற்கொண்டால் அவன் அருகில் இருக்கும் பாக்கியம் உங்களுக்கும் கிடைக்கும். அவன் அப்பாஸ் (ரழி) அவர்களை விட மிகச் சிறந்தவன். அல்லாஹ் பொறுமையாளர்களுடன்தான் இருக்கிறான் என்பதுதான் அக்கவிதையின் கருத்தாகும்.

அப்பாஸ் (ரழி) அவர்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்ளும் நற்கூலி, அவனுக்கு அருகில் அவனுடன் சேர்ந்து இருப்பது, இவ்வுலக வாழ்க்கையில் உங்களுடன் இருப்பதை விட மிகச் சிறந்ததாகும். நீங்கள் பொறுமை மேற்கொண்டால் அல்லாஹ்வுடன் இருக்கும் பாக்கியம் உங்களுக்கும் கிடைக்கும்.

அல்லாஹ்தான் எப்போதும் நம்முடன் இருக்கிறான். அவன்தான் எல்லாவற்றையும் கொடுத்துக் கொண்டிருக்கிறான். அவன் மூலமாகத்தான் எல்லாமே கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே அவன் அருட்கொடைகளை வழங்கினாலும் அவனுக்கு நன்றி செலுத்தியாகவேண்டும். அவன் சோதனைகளை கொடுத்தாலும் அவைகளைத் தாங்கிக் கொண்டு அவனுக்கு நன்றி செலுத்தியாகவேண்டும். நண்பனிடமிருந்து எதுவொன்றும் எப்போது கிடைத்தாலும் அது நண்பனின் தொடர்புக்கும் சந்திப்புக்கும் காரணமாகிவிடுகிறது என்பது ஒரு கவிதையின் கருத்தாகும்.

எல்லாவற்றையும் விட அல்லாஹ் ஒருவன் மீதே அதிகம் பிரியம் வைக்கவேண்டும். அதுதான் ஈமானின் (இறை நம்பிக்கையின்) அடையாளமாகும். எல்லாப்



பொருட்களைக் காட்டிலும் அல்லாஹ்வின் மீது அதிகம் பிரியம் வைப்பதில்தான் இறைநம்பிக்கையின் சுவை இருக்கிறது. 'இறைநம்பிக்கை கொண்டவர்களோ அல்லாஹ்வை அனைவரையும் விட அதிகமாக நேசிக்கிறார்கள்.' (அல்குர்ஆன் 2:165)

ஒருவருக்கு அல்லாஹ் விருப்பமானவனாக ஆகிவிட்டால், அவன் தொல்லை கொடுத்தாலும் அவர் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டார். அதையும் பொருந்திக் கொள்வார். சந்தோசத்தில் நன்றியும் கஷ்டத்தில் பொறுமையும் கடைப்பிடிக்கவேண்டும். அதற்குப் பெயர்தான் வாழ்க்கையாகும்.

இப்போது ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட ஹதீஸின் பொருளை மீண்டும் ஒருமுறை படித்துப் பாருங்கள்.

இறைநம்பிக்கையாளனின் செயல்பாடுகள் அனைத்தும் வியப்பானதாகும். அவனது நடவடிக்கைகள் அனைத்தும் நன்மையாகவே முடிகின்றன. இறைநம்பிக்கையாளரைத் தவிர மற்ற எவருக்கும் இந்நற்பாக்கியம் கிடைப்பதில்லை. நல்ல வசதி, வாய்ப்புகளும் மகிழ்ச்சியும் அவனை வந்தடையும் போது, அவன் அதற்காக நன்றி செலுத்துகிறான். இது அவனுக்கு நற்செயலாக ஆகிவிடுகிறது. ஏதேனுமொரு துன்பமோ, நெருக்கடியான நிலையோ வந்துவிட்டால் அவன் அதில் பொறுமை கொள்கிறான். இதுவும் அவனுக்கு நற்செயலாக நன்மையானதாக அமைந்துவிடுகிறது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

## மௌலவி. துல்ஃபுகார் அஹ்மது நக்ஷபந்தி

### அல்லாஹ்வின் அருட்கொடை

படைப்பினங்களில் மிகச் சிறந்தவன் மனிதன். அல்லாஹ்வின் படைப்பில் மேதையானவன் அவன்தான். அவன் அல்லாஹ்வுக்கு அதிகம் நன்றி செலுத்த கடமைப் பட்டுள்ளான். ஏனெனில் மனிதனாகிய நமக்கு எண்ணற்ற அருட்கொடைகளை அவன் வழங்கியிருக்கிறான். 'அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தால் அதனை உங்களால் கணக்கிட முடியாது.' (14:34) அல்லாஹ்வின் இந்த வார்த்தை எவ்வளவு உண்மையான விசயமாகும். பெய்த மழையில் எவ்வளவு தண்ணீர் துளி விழுந்தது? என்று எண்ணிச் சொல்லுங்கள். வானத்தில் எவ்வளவு நட்சத்திரம் மின்னுகின்றன? பூமியில் எவ்வளவு மணல் உள்ளது? எல்லா மரங்களிலும் எவ்வளவு இலையுள்ளது? எண்ணிச் சொல்லுங்கள் என்று உங்களிடம் கேட்கப்பட்டால் உங்களால் சொல்லமுடியுமா? நிச்சயம் முடியாது. ஒருவேளை இவையெல்லாம் எண்ணிட சாத்திய மாகலாம். ஆனால் அல்லாஹ்வின் அருட்கொடைகளை யாராலும் எண்ணிட முடியாது. அல்லாஹ்வே முடியாது என்று கூறிவிட்ட பிறகு மனிதனால் எப்படி அது முடியும்.

அல்லாஹ் நமக்கு அழகான கண்ணைக் கொடுத்துள்ளான். அது விலை மதிக்கமுடியாத அருட்கொடையாகும். பார்வையற்றோரிடம் கேட்டுப் பார்த்தால்



அதன் மதிப்புத் தெரியும். குருடாக நம்மை படைத்திருந்தால் தாய், தந்தையரின் முகத்தை வாழ்நாள் முழுவதும் பார்க்கவே முடியாது. ஏன் நமது முகம் எப்படி இருக்கிறது என்பதைக் கூட கண்ணாடியில் பார்க்க முடியாது. குர்ஆனையும் பார்க்கமுடியாது. அல்லாஹ்வின் புனித இல்லமான கஅபாவையும் பார்க்கமுடியாது. பகலும் இருட்டாகவே இருக்கும். இதே போன்றுதான் அவனால் வழங்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பும் அவனது அருட்கொடையாகும். காது, மூக்கு, நாக்கு, கை, கால், விரல்கள் போன்ற ஒவ்வொன்றுமே அருட்கொடையாகும். அவற்றால் நாம் அடையும் பலன்கள் ஏராளம், ஏராளம். உடலுக்குள் நடக்கும் மாற்றங்களும் அல்லாஹ்வின் அருட்கொடையாகும். மூச்சுக் காற்று உள்ளே செல்வதும், அசுத்தமான காற்று வெளியே வருவதும், வயிற்றுக்குள் செல்லும் உணவுகள் செரிமானமடைவதும், கழிவு நீரும் கழிவுப் பொருட்களும் வெளியே வருவதும் நம்முடைய செயலுக்கு உட்பட்டதல்ல. அதுவும் அல்லாஹ்வின் அருட்கொடையாகும்.

இவைகளைத் தவிர நமக்கு வெளியிலும் எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கியுள்ளான். வாழ்வதற்கு வசதியான தட்ப வெட்ப நிலை, குடியிருக்க வீடு, மனைவி, மக்கள், வயிற்றுக்கு ஏற்றாற்போல் உண்ண உணவு, உடுத்த உடை போன்ற எத்துணை, எத்தனையோ அருட்கொடைகளை வழங்கியுள்ளான். அவற்றுக்கு நன்றி செலுத்துவது நம் மீது கடமையாகும். ஆனால் இன்று நம்முடைய நிலைமை விதவிதமான உணவுகளை

சாப்பிடுகிறோம். பிஸ்மில்லாஹ் சொல்ல மறந்து விடுகிறோம். கடைசியில் அல்ஹம்துலில்லாஹ் சொல் வதற்கும் நினைவு வருவதில்லை.

நபி நூஹ் (அலை) அவர்கள் ஆடை அணிந்தால், உணவு உண்டால், 'அல்ஹம்துலில்லாஹ்' என்று கூறு வார்கள். எனவே அவர்களுக்கு அல்லாஹ் நன்றியுள்ள அடியான் என்று பெயர் சூட்டினான். (ஹாகிம்)

நமக்கு வழங்கப்பட்ட செல்வங்கள், அருட்கொடை கள் பல்கிப் பெருகுவதற்கு அல்லாஹ் பொதுவான ஒரு சட்டத்தைக் கூறியுள்ளான். நீங்கள் (எனக்கு) நன்றி செலுத்தினால் எனது அருட்கொடைகளை உங்களுக்கு அதிகப்படுத்தித் தருவேன். (நன்றி செலுத்தாமல்) மாறு செய்தால் நிச்சயமாக என் வேதனை மிகக் கொடியதாகும் என்று உங்களின் இறைவன் அறிவிப்புச் செய்துவிட்டதை (நபியே) நினைவு கூர்வீராக! (அல்குர்ஆன் 14:7)

நாம் எந்தளவு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்து வோமோ அந்தளவிற்கு அல்லாஹ்வும் அருட்கொடை களை நமக்கு வாரிவழங்குவான். மென்மேலும் அதிகப் படுத்துவான். மாறுசெய்து அவனுக்கு நன்றி கெட்டு நடக்கும்போது தனது அருட்கொடைகளை பிடுங்கிக் கொண்டு வேதனை செய்யஆரம்பிப்பான்.

நன்றி என்பது நாவாலும் உடலாலும் நிறைவேற்ற வேண்டிய ஒரு காரியமாகும். அவனது அருட்கொடை களை நினைவு கூர்ந்து சுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ் என்று நாவிலும் கூறவேண்டும். அத்துடன் அவனது கடமைகளையும் நிறைவேற்றி உடலாலும் நன்றி செலுத்தவேண்டும். நமது நாவாலும் உடலாலும்



வணக்கத்தாலும் நம் இறைவனுக்கு எவ்வளவுதான் நன்றி செலுத்தினாலும் அது மிக மிகக்குறைவுதான். இன்று மக்களிடம் நன்றி செலுத்தும் மனப்பான்மை குறைந்து வருகிறது. எனவேதான் அல்லாஹ்வும் தனது அருட் கொடைகளை நம்மிடமிருந்தது பறித்துக் கொள்கிறான்.

## ஸபாவாசிகளின் நிகழ்ச்சி

வழங்கப்பட்ட அருட்கொடைகளுக்கு நன்றி செலுத் தாத சமுதாயத்தவர்கள் மீது எப்படியெல்லாம் சோதனை களை அல்லாஹ் இறக்கிவைத்தான் என்பதை குர்ஆன் பல இடங்களில் சொல்லிக் காட்டுகிறது. ஸபா என்பது யமன் நாட்டைச் சார்ந்த மன்னர்களுக்கும் அங்கு வசிப்போருக்கும் கூறப்படும் பெயராகும். யமன் நாட்டின் தலைநகரான ஸன்ஆ எனும் ஊரிலிருந்து மூன்று மைல் தொலைவில் மஆரிப் என்ற ஊர் ஒன்று இருந்தது. அதில் ஸபாவாசிகளும் வாழ்ந்து வந்தனர். இரு மலைகளுக்கு நடுவிலுள்ள பள்ளத்தாக்கில் அந்த ஊர் உருவானது. இரு மலைகளுக்கு நடுவிலிருந்தும் மலைகளுக்கு மேலிருந்தும் பொழியக்கூடிய மழை நீர், வெள்ளம் போன்று பெருகி, எப்போதும் அவ்வூரை சூழ்ந்திருந்தது. அருகிலுள்ள ஊரின் மன்னர் அவ்விரு மலைகளுக்கிடையில் பெரிய அணை ஒன்றை கட்டி எழுப்பினார். அதனால் மலை களிலிருந்து வடியும் மழை நீரும் பள்ளத்தாக்கு வழியே வரும் நீரும் ஊருக்குள் வராமல் தடுக்கப்பட்டது. அணைக்கு பின்னால் அதிக அளவில் தண்ணீர் சேகர மானது. அணையின் மேலே, கீழே, அதற்கும் கீழே என்று மூன்று வாசல்கள் அமைக்கப்பட்டன. ஏனெனில் சேகரமாகக்கூடிய அந்த தண்ணீர் அவ்வூரார்களின்

தோட்டந்துரவுகளுக்குப் பயன்படவேண்டும் என்ற அடிப்படையில் அவ்வணை அமைக்கப்பட்டது.

முதலில் மேலுள்ள வாயில் திறந்துவிடப்படும். அதன் வழியே வரும் தண்ணீரை அவ்வூரார் பயன்படுத்துவர். அது தீர்ந்ததும் கீழுள்ள வாயில் திறக்கப்படும். அதன்பிறகு மூன்றாவது வாயிலும் திறந்து விடப்படும். இப்படியாக மறுவருட மழைக்காலம் வரை தட்டுப்பாடின்றி தண்ணீர் அவர்களுக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. அணையின் அடியில் பனிரெண்டு பெரிய குழாய்கள் அமைக்கப் பட்டு, அதன் வழியே ஊருக்குள் பனிரெண்டு வாய்க் கால்கள் பல இடங்களில் ஓடின. அதனால் ஊரின் எல்லாப் பகுதிகளும் செழிப்பாகக் காணப்பட்டது. ஊரின் வலது மற்றும் இடது புறங்களிலுமுள்ள மலைகளின் அடியில் இரண்டு பெரிய தோட்டங்கள் உருவாயின. வற்றாத தண்ணீரால் அவற்றின் மரங்களும் பழங்களும் எப்போதும் செழித்து பசுமையாகக் காணப்பட்டன. ஒன்று மற்றொன்றைத் தொடுமளவிற்கு நீளமானவையாக இருந்தன. எல்லா வகையான மரங்களும், எல்லா விதமான பழங்களும் அங்கு காணப்பட்டன. தலை மேல் வெறும் கூடையை வைத்துக் கொண்டு ஒரு பெண் நடந்து சென்றாலே போதும் கூடை நிரம்ப பழங்கள் கிடைத்து விடும். நாம் பறிக்கத் தேவையில்லை. தானாகவே பழங்கள் பழுத்து விழுந்துவிடும். அந்த அளவிற்கு தோட்டங்கள் செழித்திருந்தன.

அவ்வூரை அல்லாஹ் நல்ல தட்பவெப்பமுடையதாக ஆக்கி வைத்திருந்தான். வெயிலும், குளிரும் மிதமானதாக இருந்தது. அங்கு வீசும் இதமான காற்றும் உடலுக்கு



ஆரோக்கியமளிக்கக்கூடியதாக இருந்தது. மனிதர் களுக்குத் தொல்லை தரும் கொசு, மூட்டை, பேன், பாம்பு, பல்லி போன்ற புழு பூச்சிகள் எதுவும் அங்கு அறவே கிடையாது. வெளியூரிலிருந்து வரும் பயணிகள் இவ்வூரில் நுழைந்ததும் அவர்களின் ஆடையிலுள்ள பேன், மூட்டை போன்ற தொல்லை கொடுக்கும் பூச்சிகள் தானாகவே இறந்து போய்விடும். அந்த அளவிற்கு அல்லாஹ் அவ்வூரை ஆரோக்கியமானதாக ஆக்கி யருளினான். அத்துடன் அச்சமில்லாமல் அருகிலுள்ள ஊர்களுக்கு அவர்கள் பயணம் செய்யவேண்டும் என்பதற்காக இடைவெளியில்லாமல் சிறு சிறு ஊர்களை ஏற்படுத்திக் கொடுத்திருந்தான்.

தனது தூதர்கள் வாயிலாக அவ்வூராரிடம் அல்லாஹ் ஒரு செய்தியைக் கூறினான். அவன் வழங்கிய விசாலமான அருட்கொடைகளை நன்கு அனுபவித்துக் கொள்ளுங்கள். மேலும் அவனது கட்டளைகளுக்கு முற்றிலும் வழிபட்டு நடந்து வாருங்கள். நல்ல அமல்கள் செய்யுங்கள். அவனுக்கு நன்றி பாராட்டுங்கள். அவன் உங்களுக்கு இவ்வூரை நல்ல ஆரோக்கியமுள்ளதாக அமைத்துக் கொடுத்துள்ளான். அவன் சொன்னபடி நடந்தால் மறுமையில் அவனது மன்னிப்பும் அருளும் கிடைக்கும் என்று கூறினான்.

மேலதிகமான செல்வ செழிப்பால், இறைத்தூதர்களின் எச்சரிக்கையை ஸபாவாசிகள் அலட்சியப்படுத்தி னார்கள். அல்லாஹ்வின் கட்டளையைப் புறக்கணித்தனர். வரம்பு மீறி நடந்து குழப்பம் விளைவித்தனர். அவர்களின் பாதுகாப்பிற்காக கட்டப்பட்ட அணையை அவர்களின்

சோதனையாக அல்லாஹ் மாற்றினான். அணையின் அடியில் பெரிய பெரிய பெருச்சாளிகளை அல்லாஹ் சாட்டினான். அவை அணையை அரித்தன. தோற்றத்தில் அணையாக காட்சியளித்தாலும் உள்ளுக்குள்ளே அரிக்கப்பட்டு பலவீனமாக இருந்தது. அடுத்து பெய்த மழையில் அணை உடைந்து தண்ணீர் ஊருக்குள்ளே புகுந்து, வீடுகளும் தோட்டங்களும் அழிந்து நாசமாயின.

ஸபா எனும் அத்தியாயத்தில் இந்நிகழ்ச்சி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மெய்யாகவே ஸபாவாசிகள் வசித்திருந்த இடத்தில் அவர்களுக்கு நல்லதோர் அத்தாட்சி இருந்தது. (அதன்) வலப்புறத்திலும் இடப்புறத்திலும் இரு சோலைகள் இருந்தன.. உங்கள் இறைவன் அளித்துள்ள ஆகாரத்திலிருந்து புசியுங்கள். அவனுக்கு நன்றியும் செலுத்தி வாருங்கள். (அது) வளமான நகரம். (அவன்) மன்னிக்கும் இறைவன் (என்று அவர்களுக்குக் கூறப்பட்டது.)

ஆனால், அவர்கள் (இப்போதனையைப்) புறக்கணித்தார்கள். (பாவத்தில் மூழ்கினார்கள்) எனவே அவர்கள் மீது அணை நீரின் வெள்ளத்தை அனுப்பினோம். (சுவைமிக்க கனிகளைக் கொண்ட) அவர்களின் இரு தோப்புகளையும் கசப்பும் புளிப்பும் கொண்ட காய்களையுடைய மரங்களாகவும், இலந்தை மரங்களாகவும் நிரம்பிய தோப்புகளாக மாற்றிவிட்டோம்.

நம்மிடம் நன்றி கெட்டவர்களாக நடந்து கொண்டதற்காக இதனை நாம் அவர்களுக்குக் கூலியாகக் கொடுத்தோம். நன்றி கெட்டவர்களைத் தவிர மற்ற எவருக்கும் இத்தகைய கூலியை நாம் கொடுப்போமா?



அவர்களின் ஊருக்கும் நாம் அருள்புரிந்த (ஸிரியாவிலுள்ள செழிப்பான) ஊர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாகப் பல கிராமங்களையும் உண்டுபண்ணி, அவற்றில் பாதைகளையும் அமைத்து இரவு, பகல் எந்த நேரத்திலும் அச்சமற்றவர்களாக அதில் பிரயாணம் செய்யுங்கள் (என்று கூறியிருந்தோம்).

ஆனால் அவர்கள் (நன்றி மறந்து) எங்கள் இறைவனே! எங்கள் பிரயாணங்களுக்கு மத்தியிலுள்ள (ஊர்களை அழித்து) தூரத்தை அதிகப்படுத்துவாயாக! என்று பிரார்த்தித்துத் தமக்குத் தாமே அநீதமிழைத்துக் கொண்டார்கள். ஆகவே, (அவர்களையும் அவர்களுடைய நகரங்களையும் அழித்து) அவர்களையும் பல இடங்களுக்குச் சிதறடித்துப் பலரும் (இழிவாகப்) பேசக்கூடிய கதைகளாக்கிவிட்டோம். நன்றி செலுத்தி, பொறுமையைக் கையாளும் ஒவ்வொருவருக்கும் இதில் பல படிப்பினைகள் இருக்கின்றன. (அல்குர்ஆன் *34:15-19*)

## நன்றி செய்வதற்கான வழி

அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியார்களாக ஆக வேண்டுமெனில், நன்றி செய்யும் மனப்பக்குவமும் உணர்வும் உள்ளத்தில் உதிக்கவேண்டும். அத்தகைய உணர்வு நம்மில் வருவதற்குரிய வழியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள். (உலக விஷயங்களில்) உங்களுக்குக் கீழிருப்பவர்களைப் பாருங்கள். உங்களைவிட மேலிருப்பவர்களைப் பார்க்காதீர்கள். அதுவே அல்லாஹ்

சோதனையாக அல்லாஹ் மாற்றினான். அணையின் அடியில் பெரிய பெரிய பெருச்சாளிகளை அல்லாஹ் சாட்டினான். அவை அணையை அரித்தன. தோற்றத்தில் அணையாக காட்சியளித்தாலும் உள்ளுக்குள்ளே அரிக்கப்பட்டு பலவீனமாக இருந்தது. அடுத்து பெய்த மழையில் அணை உடைந்து தண்ணீர் ஊருக்குள்ளே புகுந்து, வீடுகளும் தோட்டங்களும் அழிந்து நாசமாயின.

ஸபா எனும் அத்தியாயத்தில் இந்நிகழ்ச்சி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மெய்யாகவே ஸபாவாசிகள் வசித்திருந்த இடத்தில் அவர்களுக்கு நல்லதோர் அத்தாட்சி இருந்தது. (அதன்) வலப்புறத்திலும் இடப்புறத்திலும் இரு சோலைகள் இருந்தன.. உங்கள் இறைவன் அளித்துள்ள ஆகாரத்திலிருந்து புசியுங்கள். அவனுக்கு நன்றியும் செலுத்தி வாருங்கள். (அது) வளமான நகரம். (அவன்) மன்னிக்கும் இறைவன் (என்று அவர்களுக்குக் கூறப்பட்டது.)

ஆனால், அவர்கள் (இப்போதனையைப்) புறக்கணித்தார்கள். (பாவத்தில் மூழ்கினார்கள்) எனவே அவர்கள் மீது அணை நீரின் வெள்ளத்தை அனுப்பினோம். (சுவைமிக்க கனிகளைக் கொண்ட) அவர்களின் இரு தோப்புகளையும் கசப்பும் புளிப்பும் கொண்ட காய்களையுடைய மரங்களாகவும், இலந்தை மரங்களாகவும் நிரம்பிய தோப்புகளாக மாற்றிவிட்டோம்.

நம்மிடம் நன்றி கெட்டவர்களாக நடந்து கொண்டதற்காக இதனை நாம் அவர்களுக்குக் கூலியாகக் கொடுத்தோம். நன்றி கெட்டவர்களைத் தவிர மற்ற எவருக்கும் இத்தகைய கூலியை நாம் கொடுப்போமா?



அவர்களின் ஊருக்கும் நாம் அருள்புரிந்த (ஸிரியாவிலுள்ள செழிப்பான) ஊர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாகப் பல கிராமங்களையும் உண்டுபண்ணி, அவற்றில் பாதைகளையும் அமைத்து இரவு, பகல் எந்த நேரத்திலும் அச்சமற்றவர்களாக அதில் பிரயாணம் செய்யுங்கள் (என்று கூறியிருந்தோம்).

ஆனால் அவர்கள் (நன்றி மறந்து) எங்கள் இறைவனே! எங்கள் பிரயாணங்களுக்கு மத்தியிலுள்ள (ஊர்களை அழித்து) தூரத்தை அதிகப்படுத்துவாயாக! என்று பிரார்த்தித்துத் தமக்குத் தாமே அநீதமிழைத்துக் கொண்டார்கள். ஆகவே, (அவர்களையும் அவர்களுடைய நகரங்களையும் அழித்து) அவர்களையும் பல இடங்களுக்குச் சிதறடித்துப் பலரும் (இழிவாகப்) பேசக்கூடிய கதைகளாக்கிவிட்டோம். நன்றி செலுத்தி, பொறுமையைக் கையாளும் ஒவ்வொருவருக்கும் இதில் பல படிப்பினைகள் இருக்கின்றன. (அல்குர்ஆன் *34:15-19*)

## நன்றி செய்வதற்கான வழி

அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியார்களாக ஆகவேண்டுமெனில், நன்றி செய்யும் மனப்பக்குவமும் உணர்வும் உள்ளத்தில் உதிக்கவேண்டும். அத்தகைய உணர்வு நம்மில் வருவதற்குரிய வழியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள். (உலக விசய ங்களில்) உங்களுக்குக் கீழிருப்பவர்களைப் பாருங் ள். உங்களைவிட மேலிருப்பவர்களைப் பார்க்காதீர்கள். அதுவே அல்லாஹ்

புரிந்திருக்கும் அருட்கொடைகளை நீங்கள் குறைத்து மதிப்பிடாமலிருக்க மிகவும் ஏற்றதாகும். (முஸ்லிம்)

ஆனால் இன்று நம்மவர்களைத் தொற்றிக் கொண்ட பெரிய வியாதி என்னவெனில் உலக காரியங்களில் நம்மைவிட மேலிருப்பவர்களைப் பார்ப்பதும், நன்மை, நற்செயல்கள் போன்றவற்றில் நம்மைவிட கீழிருப்ப வர்களைப் பார்ப்பதும்தான். அதனால் அல்லாஹ் நமக்கு செய்த பெரிய உபகாரங்கள்கூட தெரிவதில்லை. நன்றி செய்யவேண்டும் என்ற உணர்வு கூட வருவதில்லை. நன்றி மறந்ததின் காரணமாக நம்மிடமிருந்து அருட்கொடைகள் பறிக்கப்பட்டுவிட்டால் அதன்பின் அல்லாஹ் அநியாய மாக சோதிக்கிறானே என்றுதான் புலம்புகிறோம். நன்றி மறந்ததற்காக அருட்கொடைகள் பறிக்கப்பட்டன என்ற நினைப்புகூட வருவதில்லை.

ஓர் ஊராரை அல்லாஹ் (அவர்களுக்கு) உதார ணமாகக் கூறுகிறான். அவ்வூர் (மிக்க செழிப்பாகவும், அதிலிருந்தவர்கள்) திருப்தியோடும் அச்சமற்றும் இருந்தனர். அவர்களுக்கு வேண்டிய பொருட்கள் அனைத்தும் ஒவ்வொரு திசையிலிருந்தும் தடையின்றி வந்து கொண்டிருந்தன. இந்நிலைமையில் (அவ்வூர் வாசிகள் அல்லாஹ்வை நிராகரித்து) அல்லாஹ்வுடைய அருட்கொடைகளுக்கும் நன்றி செலுத்தாமல்) மாறு செய்தனர். ஆகவே, அவர்கள் செய்து கொண்டிருந்த (தீய) செயல்களின் காரணமாக அல்லாஹ் பசியையும் பயத் தையும் அவர்களுக்கு உடையாக (அணிவித்து) அவர்கள் அதனைச் சுவைக்கும்படிச் செய்தான். (அல்குர்ஆன் *16:112)*



அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல் எப்போதும் மனதில் நிரம்பியிருக்கவேண்டும். தனிமையில் அவன் நமக்கு செய்த உபகாரங்களை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்து, இந்த அருட்கொடைகள் வழங்குவதற்கு நான் தகுதியானவன் அல்லன். தகுதியில்லாத எனக்கு பல உபகாரங்களை செய்துள்ளான். அவனுக்கு என்னால் நன்றி செலுத்த முடியவில்லை. வாழ்நாள் முழுவதும் நான் அவனை வணங்கினாலும் அவனுக்கு நன்றி செலுத்தி யவனாக மாட்டேன் என்று மனப்பூர்வமாக எண்ணு வதுதான் உண்மையான நன்றியாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். பனூ இஸ்ராயீல் மக்களில் மூன்று பேர் இருந்தனர். அவர்களில் ஒருவர் தொழுநோயாளியாகவும் மற்றொருவர் வழுக்கைத் தலையராகவும் இன்னொருவர் குருடராகவும் இருந்தனர். அல்லாஹ் அம்மூவரையும் சோதிக்க நாடினான். எனவே, வானவர் ஒருவரை அவர்களிடம் அனுப்பினான்.

அந்த வானவர் தொழுநோயாளியிடம் வந்து, 'உனக்கு மிகவும் விருப்பமானது எது?' என்று கேட்க அவர், 'நல்ல நிறமும் நல்ல தோலும்தான் எனக்கு மிகவும் விருப்ப மானவை. மக்கள் என்னை அருவெறுப்பாகக் கருதக் காரணமான இந்த நோய் என்னை விட்டு விலகினாலே போதும்' என்று சொன்னார். உடனே அவ்வானவர் அவரைத் தம் கைகளால் தடவ, அந்த அருவெறுப்பான நோய் அவரைவிட்டு விலகியது. மேலும் அவருக்கு நல்ல நிறமும் நல்ல தோலும் வழங்கப்பட்டன. பிறகு அவ்வானவர், 'செல்வங்களில் உமக்கு மிகவும்

விருப்பமானது எது?' என்று கேட்க, அவர் 'ஒட்டகம்தான்' என்று பதில் அளித்தார். ஆகவே, பத்து மாத சினையுள்ள ஒட்டகம் ஒன்று அவருக்கு வழங்கப்பட்டது. அவ்வானவர், 'இதில் உனக்கு இறைவன் வளம் (பரக்கத்) வழங்குவானாக!' என்று பிரார்த்தித்தார்.

அடுத்து, அந்த வானவர், வழுக்கைத் தலையரிடம் சென்று, 'உனக்கு மிகவும் விருப்பமானது எது?' என்று கேட்டார். அவர், 'அழகான முடிதான். மக்கள் வெறுக்கும் இந்த வழுக்கை என்னை விட்டும் நீங்க வேண்டும்' என்றார். உடனே அவ்வானவர், அவரது தலையைத் தடவினார். வழுக்கை மறைந்தது. அழகிய முடியைப் பெற்றார். அவ்வானவர், 'செல்வங்களில் உமக்கு மிகவும் விருப்பமானது எது?' என்று கேட்டார். அவர், 'பசுமாடுதான் எனக்கு மிகவும் விருப்பமான செல்வம்' என்று சொன்னார். உடனே அவ்வானவர், அந்த வழுக்கைத் தலையருக்கு சினையுள்ள பசுமாடு ஒன்றைக் கொடுத்து, 'அல்லாஹ் உமக்கு இதில் வளம் (பரக்கத்) புரிவானாக!' என்று பிரார்த்தித்தார்.

பிறகு அந்த வானவர், குருடரிடம் சென்று, 'உனக்கு மிகவும் விருப்பமானது எது?' என்று கேட்க, அவர் 'அல்லாஹ் என் பார்வையை எனக்குத் திரும்பச் செய்வதும் அதன் மூலம் மக்களை நான் பார்ப்பதும்தான் எனக்கு மிகவும் விருப்பமானது' என்று பதிலளித்தார். உடனே அவ்வானவர், அவரைத் தமது கரத்தால் தடவ, அவருக்கு அல்லாஹ் அவரது பார்வையைத் திருப்பித் தந்தான். பிறகு அவ்வானவர், 'செல்வங்களில் உமக்கு மிகவும் விருப்பமானது எது?' என்று கேட்டார். அவர்,



'ஆடு' என்றார். அவருக்கு அவ்வானவர், சினையுற்ற ஆடு ஒன்றைக் கொடுத்தார்.

ஒட்டகமும் மாடும் வழங்கப் பெற்ற இருவரும் நிறைய குட்டிகள் ஈந்திடப் பெற்றனர். ஆடு வழங்கப் பெற்ற இந்த மனிதரும் நிறைய குட்டிகள் ஈந்திடப் பெற்றார். தொழு நோயாளியாய் இருந்தவருக்கு ஒரு பள்ளத்தாக்கு நிரம்ப ஒட்டகங்களும் வழுக்கைத் தலையராய் இருந்தவருக்கு ஒரு பள்ளத்தாக்கு நிரம்ப மாடுகளும் குருடராக இருந்தவருக்கு ஒரு பள்ளத்தாக்கு நிரம்ப ஆடுகளும் சேர்ந்தன.

பிறகு அவ்வானவர், தொழுநோயாளியாய் இருந்தவரிடம், தமது அதே தோற்றத்திலும் அமைப்பிலும் சென்று, 'நான் ஓர் ஏழை மனிதன். என் பயணத்தில் வாழ்வாதாரம் அறுபட்டுவிட்டது. செலவுக்குப் பணம் தீர்ந்துபோய்விட்டது. இன்று உதவிக்கான வழிவகை எனக்கு அல்லாஹ்வையும் பிறகு உன்னையும் தவிர வேறெவரும் இல்லை. உனக்கு அழகிய நிறத்தையும் நல்ல தோலையும் செல்வத்தையும் கொடுத்த இறைவனின் பெயரால் உன்னிடம் ஓர் ஒட்டகத்தைக் கேட்கிறேன். அதன் மீது பயணம் செய்து நான் போக வேண்டிய இடத்திற்கு போய்ச் சேருவேன்' என்று சொன்னார்.

அதற்கு அந்த மனிதர், 'எனக்குக் கடமைகள் நிறைய இருக்கின்றன. எனவே என்னால் நீ கேட்டதைத் தரமுடியாது' என்றார். உடனே அவ்வானவர், 'உன்னை எனக்குத் தெரியும் போலுள்ளதே. மக்கள் அருவெறுக்கின்ற தொழுநோயாளியாகவும் ஏழையாகவும் நீ இருக்கவில்லையா? பிறகு அல்லாஹ் உனக்கு

செல்வத்தைக் கொடுத்தானல்லவா?' என்று கேட்டார். அதற்கு அவன், 'இல்லையே! நான் இந்த அழகான நிறத்தையும் தோலையும் இந்த செல்வத்தையும் வாழையடி வாழையாக என் முன்னோரிடமிருந்து வாரிசாகப் பெற்றேன்' என்று பதிலளித்தான். உடனே அவ்வானவர், 'நீ இக்கூற்றில் பொய்யனாய் இருந்தால் நீ முன்பு எப்படி இருந்தாயோ அப்படியே உன்னை அல்லாஹ் மாற்றி விடட்டும்!' என்று சொன்னார்.

பிறகு வழுக்கைத் தலையரிடம் தமது அதே உருவத்தில் சென்று, முன்பு தொழுநோயாளியிடம் கேட்டதைப் போன்றே கேட்டார். அவரும் முதலாமவர் பதிலளித்ததைப் போன்றே பதிலளித்தார். அவ்வானவர் முதலாமவரைச் சபித்ததைப் போலவே இவரையும் சபித்து விட்டு அகன்றார்.

பிறகு இறுதியாக, குருடரிடம் தமது அதே உருவிலும் அமைப்பிலும் வந்து, 'நான் ஓர் ஏழை மனிதன். வழிப் போக்கன், என் பயணத்தில் வாழ்வாதாரம், வழிச் செலவுக்கான பணம் தீர்ந்து போய்விட்டது. இன்று என் உதவிக்கான வழி அல்லாஹ்வையும் பிறகு உன்னையும் தவிர வேறெவரும் இல்லை. என் பயணத்தில் என் தேவையைத் தீர்த்துக் கொள்ள ஆடு ஒன்றைத் தரும்படி, உனக்குப் பார்வையைத் தந்த இறைவன் பெயரால் கேட்கிறேன்' என்று கூறினார்.

குருடராய் இருந்து பார்வை பெற்ற அந்த மனிதர் வானவரிடம், 'நான் குருடனாகத்தான் இருந்தேன். அல்லாஹ் எனக்குப் பார்வையைத் திருப்பித் தந்தான். நீர் விரும்புவதை எடுத்துக் கொள்க. விரும்புவதை விட்டு



விடுக. அல்லாஹ்வின் மீதாணையாக, இன்று நீர் எடுக்கின்ற எந்தப் பொருளையும் திரும்பித் தரும்படி அல்லாஹ்வுக்காக நான் சிரமப்படுத்த மாட்டேன்!' என்று சொன்னார்.

உடனே அவ்வானவர், 'உமது செல்வத்தை நீரே வைத்துக் கொள்ளும். இது உங்களை சோதிப்பதற்காகத்தான். உம் மீது திருப்திக் கொள்ளப்பட்டது. உம்முடைய இரு தோழர்கள், (தொழுநோயாளி, வழுக்கைத் தலையர்) மீது சினம் கொள்ளப்பட்டது' என்று சொன்னார். (முஸ்லிம்)

## நமக்குரியது எதுவுமில்லை

இதே போன்று தான் நாம் இவ்வுலகிற்கு வரும்போது எப்பொருளையும் கொண்டு வரவில்லை. நம் மேனியில் ஒரு துணிகூட இருந்ததில்லை. அதன் பிறகு கிடைத்த அனைத்தும் அல்லாஹ்வின் புறத்திலிருந்தே கிடைத்துள்ளது. எனவே நாம் அவனுக்கு நன்றி செய்ய கடமைப் பட்டுள்ளோம்.

சுலைமான் இப்னு ஹர்ப் (ரஹ்) அவர்கள் மிகப் பெரிய ஹதீஸ் கலை வல்லுநர். மாபெரும் அறிஞர். அவர்கள் ஒரு நாள் மன்னர் ஹாரூன் ரஷீத் அவர்களின் அரசவைக்கு வந்தார்கள். அப்போது பேசிக் கொண்டிருந்த மன்னருக்கு தாகம் எடுத்தது. தண்ணீர் கொண்டு வருமாறு பணியாளருக்கு உத்தரவிட்டார். பணியாளர் ஒரு குவளை குளிர்பானத்தை எடுத்துவந்தார். அதை கையில் வாங்கி, குடிக்கப் போன மன்னரைப் பார்த்து, சுலைமான் இப்னு ஹர்ப் (ரஹ்) அவர்கள், 'அரசரே! கொஞ்சம் நில்லுங்கள்!

இப்போது உங்களுக்கு தாகம் எடுத்ததைப் போன்று ஒரு சமயம் கடுமையான தாகம் ஏற்பட்டு, முழு உலகிலும் இந்த ஒரு குவளைத் தண்ணீர் தவிர வேறெதுவும் இல்லையெனில், எவ்வளவு தொகை கொடுத்து இந்த தண்ணீரை வாங்குவீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு மன்னர் ஹாரூன் ரஷீத் அவர்கள், 'எனது அரசாட்சியில் பாதியைக் கொடுத்தாகிலும் அதை வாங்கிடுவேன்' என்றார்.

பிறகு சுலைமான் இப்னு ஹார்ப் (ரஹ்) அவர்கள், 'மன்னரே, நீங்கள் தண்ணீரைக் குடித்துவிட்டீர்கள். உங்களின் வயிற்றுக்குள் அது சென்றுவிட்டது. ஆனால் உள்ளே சென்ற தண்ணீர் சிறுநீராக வெளிவராமல் உள்ளேயே இருந்துவிட்டது. அதை வெளியேற்ற உங்களால் முடியவில்லை. அதை வெளியேற்றக்கூடிய மருத்துவர் முழு உலகிலும் ஒருவர்தான் இருக்கிறார் என்றால் அதை வெளியேற்றுவதற்காக அவருக்கு எவ்வளவு தொகை கொடுப்பீர்கள்?' என்று வினவினார்கள்.

மன்னர் சிந்தித்துப் பார்த்துவிட்டு, 'மீதமுள்ள அரசாட்சியையும் கொடுத்துவிடுவேன்' என்றார். சுலைமான் இப்னு ஹார்ப் (ரஹ்) அவர்கள், 'மன்னரே சற்று யோசித்துப் பாருங்கள். ஒரு குவளை தண்ணீர் குடித்து, வெளியேற்றுவதற்கே உங்களின் முழு அரசாட்சியையும் செலவழிக்க வேண்டியிருக்கிறதே! அப்படியானால் அல்லாஹ்வின் எண்ணற்ற அருட்கொடைகளுக்கு, உபகாரங்களுக்கு என்ன கொடுக்கமுடியும்?' என்றார்கள்.

நாம் அல்லாஹ்வின் அருட்கொடைகளை நிதானமாக



சிந்தித்துப் பார்த்தால் அவனுக்கு காலம் முழுவதும் நன்றி செலுத்திக் கொண்டே இருக்கவேண்டும் என்று நம் மனசாட்சியே சொல்லிவிடும். நாம் எவ்வளவுதான் நன்றி செலுத்தினாலும் நம் கடமை நீங்கிடாது.

## பொறுமையின் மகிமை

மனித வாழ்க்கை மாறிக் கொண்டே செல்லக்கூடியது. ஒரே நிலையில் எவரது வாழ்க்கையும் இருப்பதில்லை. ஆனால் வாழ்வதும், மரணிப்பதும், மரணத்திற்குப் பின் கேள்வி கணக்குக் கேட்கப்படுவதும் அனைவருக்கும் ஏற்படக்கூடிய அம்சங்களாகும்.

அல்லாஹ் நாடியவர்களுக்கு தன் அருளை சுருக்கிக் கொள்கிறான். நாடியவர்களுக்கு விரிவுபடுத்துகிறான். அவன் பக்கமே நீங்கள் கொண்டு செல்லப்படுவீர்கள். *(அல்குர்ஆன் 2:245)*

சந்தோசமான நிலைமையிலும் துன்பமான நிலைமையிலும் அடியார்களை ஷைத்தான் வழிகெடுக்க முயலுவான். சந்தோசமான நிலையில் அல்லாஹ்வை மறந்து, அலட்சியமாய் வாழும் எண்ணத்தைப் போடுவான். துன்பான நிலையில் அல்லாஹ்வின் அருளை விட்டும் நிராசையாகும் எண்ணத்தைப் போடுவான். அல்லாஹ்வை மறந்து அலட்சியமாய் வாழ்பவனும் அவனது அருளிலிருந்து நிராசையடைபவனும் வழி தவறியவர்களே. அவ்விரண்டு நிலைகளிலும் நேரான பாதையில் நிலைத்திருப்பதற்கான ஆயுதம்தான் நன்றியும் பொறுமையுமாகும். அவையிரண்டின் மூலமே சொர்க்கத்திற்கு மனிதன் செல்லமுடியும்.

இறைநம்பிக்கையுள்ள அடியானுக்கு இவ்வுலகில் சிறியதோ, பெரியதோ எந்தவொரு துன்பம் நேரிட்டாலும் அதற்காக அவனுக்கு நன்மை எழுதப்படுகிறது. ஏனெனில், அதில் அவன் பொறுமை மேற்கொள்கிறான். ஒரு தடவை இரவு நேரத்தில் வீட்டில் எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்து வீடு இருட்டானது. உடனே å. Bkli^ 'இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்' என்று கூறினார்கள். அதைக் கேட்ட ஆயிஷா (ரழி) அவர்கள், வியப்படைந்து, 'அல்லாஹ்வின் தூதரே! இந்த வாக்கியம் பெரிய சோதனை அல்லது கவலை ஏற்படும்போதுதானே சொல்லப்படும். தாங்கள் விளக்கு அணைந்ததற்கு அதைக் கூறுகிறீர்களே?' என்று கேட்டார்கள். அப்போது நபியவர்கள், 'ஆயிஷாவே! விளக்கு அணைவதும் இறைநம்பிக்கையானுக்கு ஒரு துன்பமாகும். அந்த நேரத்திலும் இந்த வாக்கியத்தைக் கூறி பொறுமையைக் கடைப்பிடித்தால் அவனுக்கு அல்லாஹ்வின் புறத்திலிருந்து நன்மைகள் கிடைக்கும்' என்று கூறினார்கள். தனது குழந்தையின் வாழ்க்கை ஒளி அணைந்துவிடும்போது அதற்காக பொறுமை மேற்கொண்டால் நன்மை கிடைப்பதுபோன்று விளக்கின் ஒளி அணைந்திடும்போதும் இந்த வாசகத்தைக் கூறுவோருக்கு நன்மை கிடைக்கும்.

ஏதேனும் ஒரு துன்பம் வரும்போது, மார்க்கத்திற்குப் புறம்பான வார்த்தைகளை நாவிலும் சொல்லிடக் கூடாது. மற்ற உறுப்புகளையும் மார்க்கத்திற்கு மாற்றமாக செயல்படுத்திடக் கூடாது. தன்னை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இதற்குத் தான்



பொறுமை என்று சொல்லப்படும். நபி அய்யூப் (அலை) அவர்கள் பல வருடங்கள் நோயினால் சோதிக்கப்பட்டார்கள். அப்படியிருந்தும் அவர்களின் நாவில் அல்லாஹ்விற்கு எதிரான வார்த்தைகள் வெளிப்படவில்லை. நாவு உள்பட எல்லா உறுப்புகளையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். இதனால் அவர்களுக்கு அல்லாஹ் மூன்று நற்சான்றிதழை வழங்கினான். ஒன்று அவரை நாம் பொறுமையாளராகவே கண்டோம். இரண்டு எனது நல்ல அடியார். மூன்று என் பக்கமே திரும்புபவர்.

இறைநம்பிக்கையாளனுக்கு வழங்கப்படும் சோதனையும் அல்லாஹ்வின் அருள்தான். சில நேரங்களில் அடியான் தனது வணக்க வழிபாடுகளால் அல்லாஹ் நாடிய அந்தஸ்தை அடைந்திருக்க மாட்டான். எனவே அவனுக்கு சோதனைகளைக் கொடுப்பான். அந்த சோதனைகளில் அடியான் பொறுமை மேற்கொள்ளும்போது அவனுக்கு நிறைய நன்மைகளை வழங்கி அந்த அந்தஸ்தை அடையச் செய்வான். ''இறைநம்பிக்கையாளன் நோயின்போது பொறுமை மேற்கொண்டால் இலையுதிர் காலத்தில் மரத்திலுள்ள இலைகள் உதிர்வதைப் போன்று அவனது பாவங்கள் அவனிடமிருந்து உதிர்ந்துவிடுகிறது' என நபிமொழிகளில் காணப்படுகிறது.

## சோதனையே நன்மையாக

உங்களுக்கு எதிராக எந்தப் பிரச்சினை வந்து உங்களுக்கு தலைவலி கொடுக்குமோ அந்தப் பிரச்சினையில்

நீங்கள் பொறுமை மேற்கொண்டால் அல்லாஹ் அதையே உங்களுக்கு நிம்மதிக்கான வழியாக ஆக்கிடுவான். ஓர் அடியானுக்கு எப்பொருளின் மூலம் சோதனை உண்டாகுமோ அதில் பொறுமை கடைப்பிடித்தால் அப்பொருளின் மூலமே அவனுக்கு சந்தோசம் கிடைத்து விடும். இது அல்லாஹ்வின் வழிமுறைகளில் ஒன்றாகும்.

மூஸா (அலை) அவர்களை அவர்களின் தாயார் நதியில் போட்டுவிட்டு அந்த நதியைப் பார்த்து கவலைப்பட்டார்கள். இது அனைவருக்கும் ஏற்படக் கூடிய ஒன்றுதான். இறைவனின் கட்டளை என்பதால் ஓடக்கூடிய தண்ணீரில் குழந்தையைத் தூக்கிப் போட்டார்கள். மூஸாவின் தாயின் உள்ளம் (அவரை ஆற்றில் எறிந்த பின் துக்கத்தால்) வெறுமையாகிவிட்டது. (அல்குர்ஆன் 28:10)

எந்த நதியின் தண்ணீரைப் பார்த்து அவர்கள் கவலையடைந்தார்களோ அதே தண்ணீரைப் பார்த்து அவர்கள் பிந்தைய நாளில் மகிழ்ச்சியும் அடைந்தார்கள். அந்த நதியின் தண்ணீரில்தான் ஃபிர்அவ்னும் அவனுடைய பட்டாளமும் அழிக்கப்பட்டனர். மூஸா (அலை) அவர்களும் அவர்களது கூட்டத்தார்களும் தப்பித்தார்கள். ஃபிர்அவ்னின் கொடுமையிலிருந்து ஈடேற்றமடைந்தார்கள்.

ஒரு பிரச்சினை நமக்கு கவலையளிக்கும்போது, பொறுமையுடன் இருந்தால் அதுவே நமக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாக மாறிவிடும் என்பதற்கு குர்ஆன் கூறும் மற்றொரு சான்று நபி யஃகூப் (அலை) அவர்களின் வாழ்வில் நடந்ததுதான். மகன் யூஸுஃப் (அலை)



அவர்களை மற்ற பிள்ளைகள் கிணற்றில் போட்டு விட்டு அழுதவாறு யஃகூப் (அலை) அவர்களிடம் வந்து, யூஸுஃபை ஓநாய் அடித்து சாப்பிட்டு விட்டதாகக் கூறி அவரது சட்டையைக் கொடுத்தார்கள். அதைப் பார்க்கும் போதெல்லாம் நபி யஃகூப் (அலை) அவர்களுக்கு கவலை ஏற்பட்டது. ஆனாலும் அவர்கள் அழகிய பொறுமை மேற்கொண்டார்கள். அதன் பலனை பின்னாட்களில் அல்லாஹ் காண்பித்தான். நபி யூஸுஃப் (அலை) அவர்கள் பதவியில் அமர்ந்ததும் தன் சகோதரர்களிடம் தன்னை அறிமுகப்படுத்திவிட்டு, தன் சட்டையை தந்தையிடம் கொண்டு செல்லும்படி கூறினார்கள். அழுது, அழுது கண்பார்வையை இழந்த யஃகூப் (அலை) அவர்கள் சட்டையைப் பெற்றுக் கொண்டவுடன் பார்வையையும் பெற்றுக் கொண்டார்கள். அந்த சட்டையைப் பார்த்து மகிழ்ச்சியும் அடைந்தார்கள். ஆரம்பத்தில் சட்டைதான் அவர்களுக்கு கவலையளித்தது. அவர்கள் பொறுமை மேற்கொண்டதால் சட்டையின் மூலமாகவே அல்லாஹ் அவர்களின் துன்பத்தை நீக்கி, மகிழ்ச்சியைக் கொடுத்தான்.

அல்லாஹ் பொறுமையாளர்களையே அதிகம் விரும்புகிறான். அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான் என்பதை நம் மனதில் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்ளவேண்டும். தம்முடன் அல்லாஹ் இருக்கும் பாக்கியத்தை பெற்றுக் கொண்டவரை விட சிறந்தவர் எவர் இருக்கமுடியும்? எந்த மனிதனும் எப்பொருளும் அவருக்கு எதுவும் செய்திட முடியாது. நன்மை, தீமை எல்லாவற்றையும் கொடுப்பவனும்

அவனே; நீக்குபவனும் அவனே. பொறுமையைக் கடைப்பிடிக்கும் போது அவன் நம்முடன் சேர்ந்து விடுகிறான்.

நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கிறது. நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கிறது. (அல்குர்ஆன் 94:5,6) அல்லாஹ் ஒரு தடவை சொன்னாலே போதுமானது. அதில் எவ்வித சந்தேக முமில்லை. இருப்பினும் இரண்டு தடவை சொல்லி யிருக்கிறான். இதற்கு குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறும் காரணம், துன்பத்தின் போது அடியான் பொறுமையாக இருந்தால் அல்லாஹ் அதற்கு பகரமாக இரண்டு இன்பங்களை வழங்குகிறான். நெருக்கடி ஒன்று வந்தால், அதன் பின் இரண்டு சந்தோசங்கள் கிடைக்கும்.

இன்று பெரும்பாலும் வீட்டிலோ, கடையிலோ ஏதேனும் பிரச்சினை அல்லது துன்பம் வந்துவிட்டால், உடனடியாக நாம் யோசிப்பது, நமக்கு யாரேனும் செய்வினை, சூனியம் செய்துவிட்டார்களா? என்பது தான். அதற்காக மேலும் காசு, பணம் செலவழித்து ஓதிப் பார்ப்பவர்கள், மந்திரிப்பவர்களிடம் சென்று முறையிடுவதுதான். இந்த துன்பம், சோதனை எதற்காக வந்தது? நம் அமல்களில் என்ன குறைபாடு உள்ளது என்பதைப் பற்றி யோசிக்க மறந்துவிடுகிறோம். அச்சமயம் பொறுமையைக் கடைப்பிடித்து அல்லாஹ்விடமே முறையிடுவோமேயானால் நமக்கு நன்மையாக மாறிவிடும்.



## அல்லாஹ்வுக்கு விருப்பமானவர்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் அழகும் குணமும் நிறைந்த ஒரு பெண்மணி இருந்தார். அவரை நல்ல செல்வச் செழிப்பு நிறைந்த நபித் தோழர் ஒருவர் மணந்து கொண்டார். வாழ்க்கையின் எல்லா வசதிகளும் நிறைந்திருந்ததால் வாழ்க்கை மகிழ்ச்சிகரமாகச் சென்றது. மனைவி தன் கணவனுக்கு வேண்டிய எல்லா உபகாரங்களையும் கடமைகளையும் செவ்வனே நிறைவேற்றினார். ஆதலால் கணவன்-மனைவி இருவரும் சந்தோசமாக வாழ்ந்தனர்.

ஒரு நாள் இரவு அன்று படுக்கையில் இருக்கும்போது கணவருக்கு தாகம் எடுத்தது. மனைவியிடம் தனக்கு தண்ணீர் கொண்டுவருமாறு கோரினார். மனைவி எழுந்து தண்ணீர் கொண்டு வரச் சென்றார். எடுத்து வருவதற்குள் கணவர் தூங்கிவிட்டார். தண்ணீர் கோப்பையுடன் மனைவி நின்று கொண்டேயிருந்தார். மறுமுறை கண் விழித்துப் பார்க்கும் போது மனைவி தண்ணீர் கோப்பையுடன் நின்றிருப்பதைக் கண்டார். தனக்காக நீண்ட நேரம் நின்ற மனைவியைப் பார்த்து சந்தோச மடைந்தார். உடனே எழுந்து தண்ணீரை வாங்கி, அருந்தி விட்டு, 'உன் செயல் இன்று எனக்கு மிகுந்த மகிழ்ச்சி யளித்தது. நீ என்ன வேண்டுமானாலும் கேள்! அதை நான் நிறைவேற்றி வைக்கிறேன்!' என்று கணவர் கூறினார். 'நீங்கள் சொல்வது உண்மைதானா? நான் எதைக் கேட்டாலும் கொடுப்பீர்களா?' என்று திரும்ப மனைவி கேட்டார். 'ஆம்! இதிலென்ன சந்தேகம்?' கேட்டதைக் கொடுத்துவிடுகிறேன்!' என்றார் கணவர். உடனே

மனைவி 'அப்படியானால் என்னை தலாக் கொடுத்து விடுங்கள்!' என்று கூறினார்.

ஆனந்தமாக, மகிழ்வுடன் வாழ்க்கை சென்று கொண்டிருக்கும் போது திடீரென்று தலாக் பிரச்சினை எழுந்ததும் கணவர் மனமுடைந்து போனார். அழகும் நற்குணமும் கட்டுப்பாடும் பேணுதலும் நிறைந்த ஒரு பெண்மணி மனைவியாக அமைந்திடுவது எவ்வளவு பெரிய பாக்கியம்? இப்போது திடீரென்று தலாக் கோருவதற்கு என்ன காரணம் என்று குழம்பிப் போனார். 'என்னால் உனக்கு கஷ்டம் ஏற்பட்டு விட்டதா? உன்னை நான் அவமரியாதை செய்துவிட்டேனா? உனக்கு ஏமாற்றம் அளித்துவிட்டேனா? என் மீது கோபமா? எனது செயல் ஏதாவது உனக்கு பிடிக்கவில்லையா?' என்று பல கேள்விகளை மனைவியிடம் கேட்டார். அனைத்து கேள்விகளுக்கும், 'அப்படியெல்லாம் இல்லை!' என்றே மனைவி பதில் தந்தார். 'எனக்கு உங்களைப் பிடிக்கவில்லையென்றால், நீங்கள் சொல்லும் வேலைகளையெல்லாம், 'நான் செய்யமாட்டேன் அல்லவா?' என்று கூறிவிட்டு, 'நான் கேட்பதை நீங்கள் நிறைவேற்றித் தருவீர்கள் என்று கூறினீர்கள் அல்லவா? எனவேதான் உங்களிடம் தலாக் கேட்கிறேன்!' என்றார். வாக்கு கொடுத்துவிட்டோம். இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் கணவர் குழம்பிப் போனார். 'சரி, விடியட்டும். காலையில் நபியவர்களிடம் சென்று இதைப் பற்றி கேட்போம்' என்று கூறினார். 'சரி, மிக நல்லது!' என்று மனைவி சொல்லிவிட்டு, இருவரும் தூங்கினர்.

விடிந்ததும் மனைவி கணவரிடம், 'சீக்கிரம் வாருங்கள், நபியவர்களிடம் செல்வோம்' என்று அவசரப்படுத்தினார். இருவரும் நபியவர்களிடம் புறப்பட்டுச் சென்றார்கள். வழியில் ஒரு கல் தடுக்கி, கணவர் கீழே விழுந்தார். அதனால் அவரது காலில் காயம் ஏற்பட்டு இரத்தம் வடிந்தது. உடனே மனைவி தன் முந்தானை ஓரத்தைக் கிழித்து, கணவரின் காலில் கட்டிவிட்டு, 'வாருங்கள் வீட்டுக்குப் போவோம். நான் உங்களிடம் தலாக் கேட்கவில்லை' என்று கூறினார். கணவர் மறுபடியும் குழம்பிப் போனார். 'என்னிடம் தலாக் கேட்கும் போதும் காரணம் புரியவில்லை. தலாக் மறுக்கும்போதும் காரணம் புரியவில்லை. இரண்டிற்கும் காரணம் என்ன?' என்று கேட்டார். 'வீட்டுக்கு வாருங்கள். காரணம் கூறுகிறேன்!' என்று சொல்லி கணவரை அழைத்துச் சென்றார்.



வீட்டுக்கு வந்ததும் கணவரிடம், 'நீங்கள் சில நாட்களுக்கு முன்பு என்னிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஒரு ஹதீஸ் சொன்னீர்கள். அல்லாஹ் எவருக்கு நன்மை செய்ய நாடுகிறானோ, அவருக்கு துன்பத்தைக் கொடுக்கிறான் (புகாரி) என்பதே அந்த நபிமொழி. அல்லாஹ் விருப்பம் கொண்ட அடியார்கள் மீது துன்பத்தைப் பொழிகிறான் என்று நபியவர்கள் கூறியிருக்க, உங்களுடன் ஒரு வருடமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். உங்களிடம் எவ்வித கவலையோ, துன்பமோ நேர்ந்ததாக நான் காணவில்லை. மற்றபடி உங்களின் இறைநம்பிக்கையில் நயவஞ்சகம் கலந்துவிட்டதாகவோ உங்களின் அமல்களில் மாற்றம் ஏற்பட்டுவிட்டதாகவோ நான் எண்ணவில்லை. அல்லாஹ் பிரியம் கொள்ளாத

ஒருவருக்கு மனைவியாக இருப்பதா? என்று எண்ணிதான் உங்களிடம் நான் தலாக் கோரினேன். ஆனால் நபியவர்களிடம் விளக்கம் கேட்பதற்காகச் செல்லும் போது உங்களின் காலில் அடிபட்டதும், அல்லாஹ் உங்கள் மீதும் பிரியம் வைத்துள்ளான் என்பதை நான் அறிந்து கொண்டேன். எனவே வாழ்நாள் முழுவதும் உங்களுக்குப் பணிவிடை செய்வதையே விரும்பினேன். ஆதலால் உங்களிடம் தலாக் கோருவதை நிறுத்திக் கொண்டேன்' என்று மனைவி கூறினார்.

நபித்தோழியர் துன்பத்தையும் மனமுவந்து ஏற்றுக் கொண்டு பொறுமை காத்தனர். துன்பமும் அல்லாஹ்வின் அருள். அதன் மூலமும் நன்மையை அடையலாம் என்று எண்ணிவாழ்ந்தனர். நன்றியும் பொறுமையும் தான் வாழ்வின் வளத்திற்குக் காரணம் என்பதை விளங்கியிருந்தனர்.

உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள். ஏதேனும் துன்பம் நேரிடும்போது மனிதன் பொறுமை கொள்ளாமல் தன் ஆடைகளை கிழித்துக் கொண்டு, மக்களிடம் அழுது புலம்பி, ஒப்பாரி வைப்பானேயானால், நைல் நதியின் தண்ணீர் துளியளவுக்கு அல்லாஹ் அவனது ஏட்டில் பாவத்தை எழுதிடுவான்.

ஒரு நபிமொழியில் வந்துள்ளதாவது. மறுமை நாளில் நன்மை-தீமை நிறுக்கும் தராசு நிலைநிறுத்தப்படும். அப்போது மக்கள் அனைவருக்கும் அவரவர் செய்த நல்லறங்களுக்குத் தகுந்தவாறு தராசில் நிறுத்தி, கூலி வழங்கப்படும். ஆனால் இவ்வுலகில் துன்பங்களுக்கு ஆளானோர் அழைத்து வரப்படும்போது, அவர்களுக்காக



எவ்வித தராசும் வைக்கப்படாது. ஏடுகளும் சமர்ப் பிக்கப்படாது. சோதனை என்ற மரத்தருகில் அவர்கள் அழைத்து வரப்படுவர்.. அப்போது அவர்கள் மீது அம்மரத்திலிருந்து நற்கூலிகள் அருவிபோல் கொட்டும். பொறுமையாளர்களுக்கு அவர்களின் கூலி கணக்கின்றி (அதிகமாகக்) கொடுக்கப்படும் என்ற (39:10) இறை வசனத்தின் பொருள் இதுதான் என்று நபியவர்கள் கூறினார்கள். (தப்ரானீ)

## நிம்மதி பெற...

வாழ்க்கையில் நன்றியும் பொறுமையும் அவசியம் இருக்கவேண்டும். குறிப்பாக குடும்பப் பெண்களிடம் இத்தகைய பண்புகள் இருந்தால்தான் வாழ்க்கை நிம்மதியாக இருக்கும். இல்லையெனில் வீட்டில் எவ்வளவுதான் இருந்தாலும் எப்போதும் பிரச்சினைகளும் சண்டைகளும் வந்து கொண்டே இருக்கும். எனவே தான் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் தன் மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களின் மனைவியிடம் பொறுமையும் கிடைத்ததைப் பெற்றுக் கொண்டு நன்றி செலுத்தும் தன்மையும் இல்லாததைக் கண்டு தலாக் விடுமாறு உத்தரவிட்டார்கள்.

நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் தன் மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களையும் மனைவியையும் மக்காவின் பள்ளத்தாக்கு ஒன்றில் விட்டுச் சென்றார்கள். இஸ்மாயீல் (அலை) அவர்கள் வாலிபப் பருவத்தை அடைந்ததும் பனூ ஜுர்ஹும் என்ற வமிசத்திலுள்ள ஒரு பெண்ணை மணமுடித்தார்கள். இஸ்மாயீல் (அலை)

அவர்களின் வாழ்வாதாரம் வேட்டையாடுவதில்தான் இருந்தது. எனவே சில நேரங்களில் வேட்டையில் உணவு கிடைக்கும். சில நேரங்களில் கிடைக்காது. ஒரு நாள் நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் மகனை பார்த்து வருவதற்காக மக்கா வந்தார்கள். அப்போது வீட்டில் இஸ்மாயீல் (அலை) அவர்கள் வேட்டைக்குச் சென்றிருந்தார்கள். மருமகளிடம் விசாரித்தார்கள். வேட்டைக்குச் சென்றிருப்பதாகக் கூறினார். பிறகு வாழ்க்கையின் நிலைமைப் பற்றியும் வாழ்வாதாரங்களைப் பற்றியும் விசாரித்தார்கள். அதற்கு மருமகள், 'நாங்கள் மிக மோசமான நிலையில் இருக்கிறோம். வாழ்க்கை மிகவும் நெருக்கடியாக உள்ளது!' என்று அவர்களிடம் புலம்பலானார். நன்றிக்குப் புறம்பான வார்த்தைகள் மறுமகளிடம் வெளியாவதைக் கண்டார்கள். கொஞ்ச நேரம் இஸ்மாயீல் (அலை) அவர்களை எதிர்பார்த்திருந்தார்கள். பிறகு, 'உன் கணவர் வந்தால் அவரிடம் நான் ஸலாம் சொன்னதாகக் கூறிவிடு. மேலும் அவரது வீட்டு வாசல் நிலை சரியில்லை. அதை மாற்றி விடுமாறு நான் கட்டளையிட்டதாகக் கூறி விடுடு!' என்று சொல்லிவிட்டு கிளம்பினார்கள்.

இஸ்மாயீல் (அலை) அவர்கள் வீட்டுக்குள் வந்ததும் யாரோ வந்து சென்றிருப்பதை உணர்ந்தார்கள். 'வீட்டுக்கு யாராவது வந்தார்களா?' என்று மனைவியிடம் விசாரித்தார்கள். ஆம். பெரியவர் ஒருவர் வந்தார். இன்னின்ன வாறு உடலமைப்பு இருந்தது. உங்களைப் பற்றி விசாரித்தார்கள். வேட்டைக்குச் சென்றதாகக் கூறினேன். நம் வாழ்க்கை நிலையைப் பற்றி விசாரித்தார்கள். 'மிக சிரமத்தில் நெருக்கடியில் இருப்பதாகத் தெரிவித்தேன்!'



என்று மனைவி பதிலளித்தார்கள். 'உன்னிடம் ஏதாவது செய்தி கூறினார்களா?' என்று கேட்க, மனைவி, ஆம். உங்களுக்கு ஸலாம் சொன்னார்கள். உங்கள் வீட்டு வாசல் நிலையை மாற்றிவிடுமாறும் அவர் கூறினார் என்றார். உடன் இஸ்மாயீல் (அலை) அவர்கள், மனைவியிடம், 'அவர்தாம் என் தந்தை. உன்னை விட்டும் பிரிந்து விடுமாறு எனக்குக் கட்டளையிட்டுள்ளார். எனவே நீ உன் வீட்டுக்குச் சென்றுவிடு!' என்று கூறி, தலாக் சொன்னார்கள்.

பிறகு அதே குலத்திலுள்ள மற்றொரு பெண்ணை இஸ்மாயீல் (அலை) அவர்கள் மணமுடித்தார்கள். நீண்ட நாட்களுக்குப் பின் மறுபடியும் இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்காவிற்கு வந்து இஸ்மாயீல் (அலை) அவர்களின் வீட்டிற்கு வந்தார்கள். அப்போதும் இஸ்மாயீல் (அலை) அவர்கள் வீட்டில் இல்லை. அவர்களின் மனைவியிடம் விசாரித்தார்கள். வேட்டைக்குச் சென்றிருப்பதாக மனைவி கூறினார். 'நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? வாழ்க்கை நிலை எப்படியுள்ளது?' என்று விசாரித்தார்கள். அதற்கு இஸ்மாயீல் (அலை) அவர்களின் மனைவி, 'அல்ஹம்துலில்லாஹ் (அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) நாங்கள் நல்ல முறையில் வாழ்கிறோம். எல்லா வசதிகளும் இருக்கிறது' என்று அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் விதத்தில் கூறினார். உங்களின் உணவு என்னவென்று இப்ராஹீம் (அலை) அவர்கள் விசாரிக்க, 'கறி' என்று பதிலளித்தார்கள். 'உங்களின் பானம் என்ன?' என்று கேட்க, 'தண்ணீர்' என்று பதிலுரைத்தார்கள். உடனே 'யாஅல்லாஹ், இவர்களது

கறியிலும் தண்ணீரிலும் அருள்வளம் புரிவாயாக!' என்று இப்ராஹீம் (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். 'உன் கணவர் வந்தால் அவருக்கு என் ஸலாமைக் கூறிவிடு. அவரது வீட்டு வாசல் நிலை சரியாக - பொருத்தமாக உள்ளது. அதை அப்படியே வைத்திடுமாறு நான் கட்டளையிட்டதாகக் கூறிவிடு' என்று சொல்லிவிட்டு கிளம்பினார்கள்.

இஸ்மாயீல் (அலை) அவர்கள் வீட்டுக்குள் வந்ததும் 'உங்களிடம் யாரேனும் வந்தார்களா?' என்று விசாரித்தார்கள். ஆம். அழகிய தோற்றத்தில் வயோதிகர் ஒருவர் வந்தார். நல்ல குணமாக பேசினார் என்று இப்ராஹீம் (அலை) அவர்களை உயர்வாக மனைவி பேசிவிட்டு, உங்களைப் பற்றி என்னிடம் விசாரித்தார்கள். விபரத்தைக் கூறினேன். 'நம் வாழ்க்கை நிலை பற்றி விசாரித்தார்கள். நாங்கள் நல்லமுறையில் இருப்பதாகச் சொன்னேன்' என்றார்கள். 'உம்மிடம் ஏதாவது செய்தி சொன்னார்களா?' என்று விசாரிக்க, 'ஆம். உங்களுக்கு ஸலாம் சொன்னார்கள். உங்கள் வீட்டு வாசல் நிலையை அப்படியே வைத்துக் கொள்ளுமாறு உங்களிடம் சொல்லச் சொன்னார்கள்.' அதற்கு இஸ்மாயீல் (அலை) அவர்கள், 'அவர்தாம் என் தந்தை. நீதான் அந்த வாசல் நிலை. உன்னை என்னோடு வைத்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டுள்ளார்கள்' என்று கூறினார்கள். (புகாரி)

பொறுமையுடனும் நன்றியுடனும் வாழ்ந்தால்தான், அல்லாஹ்வின் அருள்வளம் கிடைக்கும். வாழ்வில் நிம்மதி பெறுவதற்கான வழி அவைதாம். இறைநம்பிக்கையாளனின் செயல்பாடு இந்த இரண்டில் ஒன்றாகத்தான்



இருக்கவேண்டும். மூன்றாவது ஒன்றாக இருக்கக்கூடாது. ஏனெனில் அவனது நிலை இன்பம் - துன்பம் இந்த இரண்டில் ஒன்றாகத்தான் இருக்கும். இன்பத்தில் நன்றியுடனும் துன்பத்தில் பொறுமையுடனும் வாழ்ந்து அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெறுவோமாக!